சட்டச் சொல் அகராதி

LAW LEXICON

1979 ஆம் ஆண்டு வெளியீடு

தமிழ்நாடு சட்டத்துறை
ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

சட்டச்சொல் அகராதி
(LAW LEXICON)

1979 ஆம் ஆண்டு வெளியீடு

தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசாங்கம்

தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்

தலைவர் :

திரு. எஸ். மகராஜன், பி.எஸ்ஸி., பி.எல்.,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

திரு. ஏ. சிதம்பரம், பி.ஏ., பி.எல்., முன்னாள் தலைமை செஷன்ஸ் நீதிபதி, சென்னை.	..	முழு நேர உறுப்பினர் (செயல் உறுப்பினர்—பொறுப்பு).
திரு. கீ. இராமலிங்கம், எம்.ஏ. ..	..	பகுதி நேர உறுப்பினர்.
திரு. ச. இராஜு செட்டியார், பி.ஏ., பி.எல்.		பகுதி நேர உறுப்பினர்.
திரு. ச. சு. இராமசுவாமி, பி.எஸ்ஸி., பி.எல்.		பகுதி நேர உறுப்பினர்.
திரு. கா. பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். முன்னாள் செயலாளர், சட்டத்துறை, தமிழ்நாடு அரசாங்கம்.		பகுதி நேர உறுப்பினர்.
திரு. கோ. முத்துப் பிள்ளை, பி.ஏ., முன்னாள் அரசு இணைச் செயலாளர்.	..	பகுதி நேர உறுப்பினர்.
திரு. எஸ். வடிவேலு, பி.ஏ., பி.எல்., செயலாளர், சட்டத்துறை, தமிழ்நாடு அரசாங்கம்.	..	பதவி வழி உறுப்பினர்.
திரு. கொண்டல் சு. மகாதேவன், பி.எஸ்ஸி., எம்.ஏ., இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசாங்கம்.		பதவி வழி உறுப்பினர்.
திரு. டாக்டர் ஔவை து. நடராஜன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்.	..	பதவி வழி உறுப்பினர்.
திரு. கு. ராஜாராம், பி.எஸ்ஸி., பி.எல்.	..	துணைச் செயலாளர்.
திரு. க. மோகனசந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்; டி.எல் & ஏ.எல்.	..	உதவிச் செயலாளர்.

முன்னுரை

1976 நவம்பர் 14ஆம் நாளிலிருந்து தமிழகத்தில் உயர்நீதி மன்றத்திற்குக் கீழமைந்துள்ள எல்லாக் குற்ற வழக்கு நீதிமன்றங் களிலும் தமிழே தீர்ப்பு மொழியாகச் சட்டப்படி ஏற்றுக்கொள் ளப்பட்டிருக்கிறது. அவ்வாறு தமிழ் தீர்ப்பு மொழியாவதற்கு ஏறக்குறைய நான்கு மாதங்களுக்கு முன் தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம் குற்ற வழக்கு நீதிமன்றங்களுக்கு இன்றி யமையாத மூன்று சட்டத் தொகுப்புகளையாவது மொழிபெயர்த் துத் தர வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் கோரியது. அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்கி, ஆணையமும் குற்ற விசா ரணை முறைச்சட்டம் (Criminal Procedure Code), இந்தியத் தண்ட னைச் சட்டம் (Indian Penal Code), இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidence Act) ஆகியவற்றை மூன்றரை மாதங்களில் மொழி பெயர்த்து முடித்து, மொழிபெயர்ப்புகளைத் தமிழ்நாடு அரசாங் கத்தின் அச்சகத்தில் அச்சிட்டு 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம்தேதியில் புத்தக வடிவில் வெளிக்கொணர்ந்தது. இவ்வளவு விரைவில் மொழி பெயர்க்கவேண்டிய நிலையில் அதிகத் தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஆணைய உறுப்பினர்களும் அலுவலர் களும் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்சநஞ்சமல்ல.

மேற்சொன்ன மூன்று சட்டங்களை மொழிபெயர்க்கும்போது ஆணையத்துக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் இருந்த சில கருத்துக்களையும் கொள்கைகளையும் இம் முன்னுரையில் குறிப் பிடுவது பயனுள்ளதாக இருக்குமெனக் கருதுகிறேன்.

மொழியியல் இலக்கணத்தாலும் மரபாலும் பண்பாட்டினாலும் முற்றிலும் வேறுபட்டவை ஆங்கிலமும் தமிழும். ஆங்கில மொழியிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது மூலத்துக்கு உண்மையோடு இருக்க வேண்டும் என்ற கடமையோடு தமிழ் மரபைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமையையும் மொழிபெயர்ப்பாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இக்கடமைகளைச் சரிவர ஆற்றமுடியாத காரணத்தால், "மொழிபெயர்ப்பாளர் தமிழ்" என்ற ஒரு புது வகையான தமிழ் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் வாக்கிய அமைப்புகளுக்கு முரண்பட்டவை ஆங்கில வாக்கிய அமைப்புகள். ஆங்கில வாக்கிய அமைப்புகளின் ஆதிக்கத்திலிருந்து மீள முடியாமல் சில மொழிபெயர்ப்பாளர்கள், தமிழையே ஆங்கிலத்தைப் போல, பூட்ஸ் கால் கொண்டு நடக்கச் செய்வதோடு, தமிழை, தமிழ் முறை பிறழ்ந்து பேசச் செய்யவும் செய்கிறார்கள். இவ்வாறு விளைகிற மொழிபெயர்ப்பாளர்களுடைய தமிழை, தமிழ் மாத்திரமே கற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாது; ஆங்கிலம் கற்ற தமிழர்களும், இந்த மொழிபெயர்ப்புத் தமிழை நேரடியாகப் புரிந்து கொள்ள முடியாமல், அதை ஆங்கிலத்தில் மறு மொழி பெயர்ப்புச் செய்து, அதன் பொருள் என்னவாக இருக்கலாம் என்று ஊகம் செய்து கொள்கிறார்கள். ஆனால், தமிழ் மாத்திரமே கற்றவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தமிழ் மரபு கெடாது தமிழாக்கம் செய்ய முயன்றிருக்கிறது இந்த ஆணையம்.

ஒவ்வொரு மொழியும் சொற்களாலும் சொற்றொடர்களாலும் வாக்கியங்களாலும் தனித்தன்மையைக்கொண்டிருப்பதோடு கருத்துக்களாலும் கருத்துக்களைச் சொல்லும் முறைகளாலும் உத்திகளாலும் மற்ற மொழிகளினின்றும் வேறுபட்டும் தனித்தும் நிற்கிறது. ஆங்கில மொழியிலுள்ள ஒரு வாசகத்தை எடுத்துக் கொண்டால், அது ஆங்கிலேயருக்கே உரிய சில தனிப்பட்ட கருத்துக்களைச் சொல் அடையாளங்கள் மூலம் ஆங்கில இலக்கண விதிகளுக்குட்பட்டுத் தெரிவிப்பதைக் காண்கிறோம். அந்த ஆங்கில வாசகத்தைத் தமிழ்ப்படுத்தும்போது மூலத்திலுள்ள கருத்தை ஆங்கிலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தமிழ்ச் சொல் அடையாளங்களைக் கொண்டும், ஒலிகளைக் கொண்டும் வெளியிடுகிறோம். ஆனால், தமிழிலுள்ள சொற்களினின்றும் சொற்றொடர்களினின்றும் ஆங்கிலத்தில் உள்ள சொற்களும் சொற்றொடர்களும் ஒலியினாலும் ஆட்சியினாலும் வேறுபட்டவை.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிக் கற்பு இருக்கிறது. மொழி பெயர்க்கும்போது அந்தக் கற்புக் குலையாமல் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டும். மூலமொழிக் (Source Language) குரிய கற்பையும் இயல்பையும் இலக்கு மொழிக்கு (Target Language) ஏற்றுவதும் தவறு. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிக் கற்பு இருப்பது போலவே, ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு மரபு இருக்கிறது, ஒரு பிதிரார்ஜிதம் இருக்கிறது; ஆகவேதான் அகராதியில் சொல்லப் பட்ட பொருளைக் காட்டிலும் அதிகமான பொருளும் மணமும் சுவையும் அதற்கு இருக்கின்றன. ஆங்கில மூலத்திலுள்ள சொற்கள் பலவற்றிற்குத் தமிழில் சம அர்த்தம் உள்ள பல சொற்கள் இருக்கின்றன. ஏறத்தாழ ஒரே பொருளைக் குறிக்கக் கூடிய பல தமிழ்ச் சொற்களை 'ஒரு பொருள் பன்மொழி' என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனால், உண்மையில் அச் சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பிடுவன அல்ல. ஒலி வேறுபாட் டினாலேயே வெவ்வேறு உணர்ச்சியை மனித உள்ளத்தில் கிளறி விடக் கூடியவை அவை. தமிழ்த் தாய், தன் குழந்தையைப் பார்த்து ''என் கண்ணே'' என்று கொஞ்சுகிறாள். இவ்வாறு பல நூற்றாண்டுகளாகக் கொஞ்சிக் கொஞ்சி, குலாவிக் குலாவி, ''கண்'' என்ற சொல்லுக்குள்ளே எவ்வளவோ அருமைப்பாடு ஏறி விட்டது. நீண்ட காலப் புழக்கத்தினால் ஏற்பட்டது இந்த அரு மைப்பாடு. "Oh, my eye!" என்று ஆங்கிலத் தாய் தன் குழந்தை யைப் பார்த்துக் கொஞ்சுவது இல்லை. ''கண்ணே'' என்ற சொல்லை, "Oh, my eye!" என்று மொழிபெயர்க்கும்போது, ''கண்ணே'' என்ற சொல்லுக்குள்ளே இருக்கிற அருமைப்பாடு வெளிவருவதும் இல்லை. இப்படியாக ஒவ்வொரு சொல்லுக்குள் ளும், அகராதியில் சொல்லப்பட்ட பொருளுக்கும் மீறிய மணமும் நிறமும் இருக்கின்றன. ஒரே பொருள் உள்ளவை போலக் காணப் படும் சொற்களுக்கிடையே கூட, மென்மையான, நுண்ணிய பொருள் வேறுபாடுகள் இழையோடிக் கொண்டிருப்பதை உற்றறியலாம். ஆகவே, மூலவாக்கியத்தில் இருக்கின்ற ஒவ் வொரு சொல்லின் பொருளையும் ஒன்று சேர்த்துக் கூட்டி, அந்தக் கூட்டல் மூலம் கிடைத்த மொத்தப் பொருளையே மூலத்தின் பொருள் என்று கொள்ளுதல் கூடாது.

சொற்கள் அணிவகுத்து நிற்கும் நிலையையும் பொறுத்திருக் கிறது அவற்றின் பொருள். எனவே, மொழிபெயர்ப்பாளர் மூல வாசகத்தின் பொருளை அறிவதில் எவ்வளவு நேரம் செலவழித்தா

லும் தகும். சில சட்ட வாசகங்கள் இரு விதமாகப் பொருள் கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பாளர் அவ்வாசகங்களை ஈரடியாகப் பொருள் கொள்ளும் வகையில் மொழிபெயர்க்க வேண்டும். மூலத்தின் ஐயப்பாடுகளைத் தீர்ப்பது நீதிமன்றங்களின் வேலை, மொழிபெயர்ப்பாளரின் வேலை அன்று. ஆகவே, மூலம் தெளிவற்றதாக இருந்தால், அதன் தெளி வற்ற தன்மையையும் மொழிபெயர்ப்பில் வடித்துக் கொடுக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும்.

உள்ளத்தில் உள்ள கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்பட்ட கருவிகளே சொற்கள். ஆனால், ஒரு மொழி பேசும் சமுதாயத்தைச் ''சுரீர்'' என்று தாக்கிக் கிளர்ச்சியை உண்டாக்கும் ஒரு சொல்லானது, இன்னொரு மொழி பேசும் சமுதாயத்தைக் கிஞ்சித்தும் பாதிக்கா மல் இருக்கவும் கூடும். ஒரு மொழியில் உள்ள சொற்கள் அம் மொழியைப் பேசுகிறவர்களுடைய உள்ளத்திலே சில விளைவு களை உண்டாக்குகின்றன. அதே விளைவுகளை, இன்னொரு மொழியின் சொற்கள் மூலம் அந்த மொழி பேசுகிறவர்கள் உள் ளத்திலும் உண்டாக்க முடியுமானால் அதையே மொழிபெயர்ப் பின் வெற்றி என்று சொல்லுகிறோம். இந்த வெற்றியைப் பெறு வதற்கு மொழிபெயர்ப்பாளர் மூன்று விதமான திறமைகளைப் பெற்றிருக்க வேண்டும். முதலாவதாக, மூலமொழியில் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இரண்டாவதாக, மொழிபெயர்க் கப்படுவது சட்டமாக இருந்தால், சட்டப் பயிற்சியிலோ சட்ட நிர்வாகத்திலோ நீண்ட நெடுநாள் அனுபவம் பெற்றிருக்க வேண் டும்; சொற்களை, உயிரற்ற சொற்களாகப் பார்க்காமல், அவற் றுக்குப்பின் ஆழ்ந்து பரந்து விரிந்து நிற்கும் மனித வாழ்க்கையின் உயிருள்ள பிரதிபலிப்பாகப் பார்த்து, அவற்றுக்குப் பொருள் கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். மூன்றாவதாக, மூல மொழியிலுள்ள கருத்துக்களை அப்படி அப்படியே துல்லியமாக வும், புதுக் கருத்துக்களை இம்மியும் சேர்க்காமல் மூலக் கருத்தின் மாற்று, கொஞ்சமும் குறையாமலும் இலக்கு மொழியில் (Target Language) அதாவது, தமிழில் இறக்கத் தெரிந்திருக்க வேண்டும். இலக்கு மொழியைத் தாய் மொழியாகவோ அல்லது சுவீகார மொழியாகவோ கொண்டவர்கள்தாம் இந்த மூன்றாவது திறமை யைப் பெற்றிருக்க முடியும்.

ஒரு சொல்லை இரு முறை சொல்லி விட்டால், அதன் பொருளுக்கு அழுத்தம் ஏற்பட்டுவிடும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், இது எல்லா மொழிகளுக்கும் பொதுவான நியதி அன்று. உதாரணமாக, ஹிலிகைநூ என்ற ஃபிலிப்பைன் மொழியில், ஒரு சொல்லை இரு முறை சொன்னால், உறுதிப்பாட்டிற்குப் பதில் ஐயப்பாடு ஏற்பட்டுவிடும்; ''ஆம், ஆம்'' என்று இருமுறை சொன்னால் ஹிலிகைநூ-வில் 'ஒருகால்' என்று பொருள்படும். வேறு சில மொழிகளில் மனித அனுபவத்தை எடுத்துச் சொல்லும் முறையிலும், அதைப் பாகுபடுத்தும் பாங்கிலும், அடிப்படை வேறுபாடுகளைக் காண்கிறோம். உதாரணமாக, பொலீவியாவில் உள்ள 'க்வெச்சுவா' (Quechua) என்ற மொழியில் எதிர்காலத்தைப் பற்றிப் பேசும்போது, அது நமக்குப் 'பின்பக்கத்தில் இருப்பதாகவும்', இறந்த காலத்தைப் பற்றிப் பேசும்போது அது நமக்கு 'முன் பக்கத்தில் இருப்பதாகவும்' சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் கேட்டபோது ஒரு க்வெச்சுவா சொன்னதாவது:—''இறந்த காலத்தில் நடந்துபோன நிகழ்ச்சிகளை மனக்கண்முன்னால் நாம் பார்க்கமுடிகிறது. ஆகவே, நமக்கு 'முன் பக்கத்தில்' இருக்கின்றன அவை. ஆனால், எதிர்கால நிகழ்ச்சிகளை நாம் மனக்கண்ணால் பார்க்கமுடிவதில்லை. ஆகவே, அவை நமக்குப் பின்பக்கத்தில் தான் இருக்க வேண்டும்.'' இப்படியாகச் சிந்திக்கும் விதத்திலும், வாழ்க்கையை நோக்கும்பாங்கிலும், அனுபவங்களையும் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லும்முறையிலும், பொதுவாகமொழிக்கு மொழி வேறுபாடு இருக்கிறது, சிறப்பாக, தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபாடு இருக்கிறது.

திருவடியைத் தாமரையாகவும், இடையைத் துடியாகவும், கழுத்தைக் கமுகாகவும், முகத்தைச் சந்திரனாகவும், கூந்தலை மேகமாகவும்உருவகம் செய்வது தமிழ் மரபு, இந்திய மரபு. இந்த உருவகங்கள் எல்லாம் மேனாட்டு ஆங்கில மரபுக்கு ஒவ்வாதவை. இதைப் போலவே, அணுகு முறையிலும் பல முரண்பாடுகள் இருக்கின்றன. வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்று தமிழர்கள் சொல்வார்கள்; மரத்தை வைத்துத்தான் பழத்திற்குப் பெயர் இடுவார்கள். ஆனால், ஆங்கிலேயர்களோ Plantain tree, Jack-fruit tree, Mango tree என்று பழத்தை வைத்து மரத்திற்குப் பெயர் இடுவார்கள். இவ்வாறு வாழ்க்கையை அணுகும் முறையிலே தமிழர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்

கின்றன. அவ்வளவு வேறுபாடுகளும், தமிழிலும் ஆங்கில மொழியிலும் நிழலாடுவதைப் பார்க்கிறோம். இந்த வேறுபாடுகளையெல்லாம்கருத்தில்இருத்தி வைத்துக் கொண்டுஎச்சரிக்கையோடு மொழி பெயர்ப்பாளர்கள் தமிழாக்கம் செய்ய வேண்டும். உரிய பொருத்தங்களையெல்லாம் நுணுகி ஆய்ந்து, அதன் பின்னரே சொல்லுக்கும் பொருளுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

மூலமொழியிலுள்ள வாசகத்தை ஐயந்திரிபறப் புரிந்து கொண்டபின், அந்த வாசகத்திலுள்ள கருத்தை மறுபடியும் தமிழில் படைக்க வேண்டும். மூலக் கருத்துக்களை ஆங்கிலத்தில் சொல்வதற்குப் பதில் மூல ஆசிரியர் தமிழிலேயே சொல்லியிருந்தால் தமிழ் வாசகம்எவ்வளவுஇயல்பாகவும் ஆற்றொழுக்கோடும் இயங்குமோஅவ்வளவுஇயல்பாகவும் ஆற்றொழுக்கோடும் மொழி பெயர்ப்பு இயங்க வேண்டும். மூல வாசகத்தின் பாங்கு எப்படி இருந்தபோதிலும், மொழி பெயர்ப்பாளர் அவ்வாசகத்தின் சொல்லுக்கு அடிமையாகிவிடக்கூடாது. ஆனால், அதன்பொருளைக் கொஞ்சமும் சிதைக்காமல்தமிழில் கொண்டுவரவேண்டும். அவ்வாறு செய்வதில் வெற்றி காண வேண்டுமென்றால், ஆங்கில வாசகத்திலுள்ள எல்லாச் சொற்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு, அந்த வாசகத்தால்உண்டான கருத்தோவியத்தை மொழிபெயர்ப்பாளர் தெளிவோடு பார்க்கவேண்டும்; இந்தக் கருத்தோவியத்தைத் தெளிவாகப் பார்த்த பிறகு, தாம் பார்த்ததை, ஒரு சிறு விவரத்தையும் விடாமல் எளிய தமிழில் எடுத்துச் சொல்ல வேண்டும். மூலக் கருத்தை அல்லது ஓவியத்தை, தமிழ்ச்சொல் மூலம் சொல்ல வேண்டுமேயொழிய ஆங்கில மூலத்திலுள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான தமிழ்ப் பதத்தைச் சொல்லித் தீர்க்க வேண்டும் என்று நினைப்பது தவறு. ஆங்கில வாக்கியத்திலுள்ள ஒவ்வொருபெயர்ச்சொல்லையும்தமிழிலுள்ள ஒரு பெயர்ச்சொல் மூலமாகவும், உரிச்சொல்லை உரிச்சொல் மூலமாகவும், வினைச்சொல்லை வினைச்சொல் மூலமாகவுமே மொழி பெயர்க்க வேண்டும் என்று நினைத்தால், ஆங்கில வாக்கியத்தைத் தமிழனுக்கு விளங்கக்கூடிய இயல்பான தமிழில் மொழி பெயர்க்க முடியாது. ஆங்கிலத்திலுள்ள பெயர்ச் சொல்லை, தமிழிலுள்ள ஒரு வினைச் சொல்லைக் கொண்டு மொழி பெயர்த்தால் மொழி பெயர்ப்பு ஒன்றும் கெட்டுவிடாது, இயல்பாகவே இருக்கும்.

Forster என்பவர் சொல்வது போல், மொழிபெயர்ப்பாளர்கள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு மொழிபெயர்ப்புத் தந்திரத்தை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். மூலத்திலுள்ள ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ அடிப்படையாகக் கொண்டு தமிழாக்கம் செய்வதைக் காட்டிலும், மூலத்திலுள்ள ஒரு வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழாக்கம் செய்வது நல்லபயன் தரும். பல வாக்கியங்களைக் கொண்ட ஒரு வாசகத்தை அடிப்படையாகக்கொண்டு மொழி பெயர்ப்புச் செய்தால் சில கருத்துக்கள் விடுபட்டுப் போகலாம். மூலத்திலுள்ள கருத்தில் ஓர் அம்சத்தையும்கூட விட்டுவிடக் கூடாது, மாற்றவும் கூடாது. ஆனால், ஒன்று நிச்சயம். ஆங்கில வாக்கியத்தின் அமைப்பை மாற்றாமல் தமிழாக்கம் செய்தால், அது அலங்கோலமாகவே முடியும். மூல வாக்கியத்தை இளக்கி, ஒன்று சேர்த்து, அதன் பின்னர் அதன் வேறுபட்ட உறுப்புக்களைத் தமிழ் மரபுக்கேற்றபடி மாற்றியமைத்தால்தான் மொழிபெயர்ப்பு இயல்பாக இருக்கும். ' ' கேக் ' ' செய்வதற்கென்று ஒரு வகைக் கருவி இருக்கிறது. அந்தக் கருவியின் பல்வேறு உறுப்புக்களையும் அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து, பிரித்த உறுப்புக்களை வேறு முறையில் பூட்டி, இட்லி தயார் செய்வதற்குரிய கருவியாக மாற்றும்போது என்னென்ன இடையூறுகள் ஏற்படுமோ, அவ்வளவு இடையூறுகளும் ஆங்கில வாக்கியங்களைத் தமிழாக்கம் செய்யும்போதும் ஏற்படுகின்றன.

' ' Traduttori ' ' என்றால் இத்தாலிய மொழியில் ' ' மொழிபெயர்ப்பவர் ' ' என்று பொருள். இந்தச் சொல்லில் இரண்டே எழுத்துக்களை மாற்றி ' ' Traditori ' ' என்று இத்தாலிய மொழியில் சொன்னால் ' ' துரோகி ' ' என்று பொருள். ஆகவே, இத்தாலிய மொழியில், மொழிபெயர்ப்புக்கும் துரோகத்துக்கும் இடையில் இரண்டே எழுத்துக்களுக்குள்ள வேறுபாடுதான். ஹிரோஷிமாவின் துர்ப்பாக்கியம், ஒரு மொழிபெயர்ப்புப் பிழையால் ஏற்பட்டது என்று நம்ப இடமிருக்கிறது. போட்ஸ் டாம் மாநாட்டிற்குப்பின், அமெரிக்க அரசாங்கம் ஜப்பான் அரசாங்கத்தைச் சரணடையுமாறு கேட்டு, ஓர் இறுதி எச்சரிக்கையை அனுப்பியது. அதற்கு ஜப்பானிய அரசாங்கம் எழுதிய பதிலில், ஒரு முக்கியமான ஜப்பானியச் சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. ' ' மோகு ஸட்ஸு ' ' என்ற சொல் அது. ' ' உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து

வருகிறோம். பதில் சொல்வதற்குத் தாமதமாகும்'' என்ற பொருளிலே ''மோகு ஸட்ஸு'' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், வாஷிங்டனில் கிடைத்த தகவலில், ''உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்'' என்று அந்தச் சொல் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. மொழிபெயர்ப் பாளர் செய்த இந்தப் பிழையானது, அமெரிக்க அரசாங்கம் அணுகுண்டைப் போடும் தீர்மானத்திற்குத் தூண்டுகோலாக அமைந்துவிட்டது. இலக்கியத்தை மொழி பெயர்க்கும்போது தவறு இழைத்தாலும்கூட அவ்வளவு நஷ்டம் ஏற்படாது. சட் டத்தை மொழிபெயர்க்கும்போது தவறு இழைத்தால் அதனால் ஈடு செய்ய முடியாத நஷ்டங்கள் ஏற்பட்டு விடும். ஃப்ரெஞ்சு மொழிபெயர்ப்பாளரும் புலவருமான ஏதியேன் தோலே (Etienne Dolet 1509–1546) என்பவர் பிளேட்டோவின் (Plato) நூல்களை மொழிபெயர்த்தார். அவருடைய மொழிபெயர்ப்பு சரியாக இல்லையென்றும், பிளேட்டோவின் கருத்துக்களுக்கு அவர் துரோகம் இழைத்துவிட்டார் என்றும் ஃப்ரெஞ்சு மக்கள் அவர்மீது குற்றஞ்சாட்டி, அவருடைய குரல் வளையைத் திருகி, அவரைக் கொன்றதோடு அவருடைய எழுத் துக்களையெல்லாம் தீக்கிரையாக்கினார்கள். இப்பேர்ப்பட்ட விபரீதத்திற்குக் காரணமாக இருப்பது மொழி பெயர்ப்பின் நுட் பங்களை அறியாமையே. ஒரு மொழியைக் கவனமின்றி இன் னொரு மொழியில் பெய்யும்போது, மூல மொழியின் ஆன்மா ஆவியாகப் பறந்து போய்விடுகிறது ; மிஞ்சுவது எல்லாம் மூல மொழியின் உயிரற்ற சடலம்தான். கவிதையை மொழிபெயர்க் கும்போது இந்தக் கஷ்டம் பன்மடங்கு அதிகமாகிறது. நில வொளியைப் பிசைந்து, பானை வனைய முடியாது, பகலவ னுடைய கதிர்களைப் பின்னிக் கூடை முடைய முடியாது.ஆனால் சட்டத்தைப் போன்ற அறிவியல் சம்பந்தமான உரைகளைப் பெருமுயற்சியால் பிழையில்லாமல் மொழி பெயர்க்கக்கூடும். இரு மொழிகளின் பண்பு எல்லாம் தெரிந்த புலவர்கள், சட்டத் தின் நுணுக்கம் எல்லாம் தெரிந்த நிபுணர்களோடு கூடிக் கலந் தாலோசித்துக் கூட்டுத் தவம் செய்தால் அது கைகூடும்.

மொழி பெயர்க்கும்போது சோம்பல் காரணமாகவோ அல்லது மொழிபெயர்ப்பது கடினம் என்பதாலோ மூலத்திலுள்ள தொல்லைதரும் சொல்லை அல்லது சொற்றொடரை விட்டு

விடத் தோன்றும். இப்படிச் செய்வது பொதுவாகவே தவறு தான், சிறப்பாக, சட்டத்தை மொழிபெயர்க்கும்போது, பெருந் தவறு.

சொல்லை மாத்திரம் எடுத்துக் கொண்டால், அதற்கு நான்கு குணங்கள் இருப்பதைப் பார்க்கலாம். அவையாவன: சொல்லின் பொருள், கண்ணுக்குத் தெரியும் அதன் வரிவடிவம், செவிக்குக் கேட்கும் அதன் ஒலி வடிவம், உணர்ச்சியைத் தூண் டும் அதன் ஆற்றல். பொருளுக்கு மாத்திரம் அதற்குக் கிட்டத் தட்ட நிகரான பதத்தை இலக்கு மொழியிலிருந்து பொறுக்கி எடுக்கலாம். ஆனால், அந்தப் பதத்தின் ஒலி, மூலப்பதத்தின் ஒலியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கக்கூடும், அந்த ஒலி தூண்டிவிடும் உணர்ச்சிகளும் வேறு விதமாகவே இருக்கக் கூடும். ஆகவே, மூல வாசகத்திலுள்ள சொல்வைப்பு முறை களையும், வாக்கிய அமைப்பு முறைகளையும் முற்றிலும் மாற்றி உரிய ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும் பொருளையும் பயன்படுத்தினாலன்றி, மொழிபெயர்ப்பு மூலக்கருத்தை உண் மையோடு பிரதிபலிக்காது. எந்த அளவுக்குச் சொற்களுக்கு முறுக்கேற்ற வேண்டும், அல்லது முறுக்கை எந்த அளவுக்குத் தளர்த்திவிட வேண்டும், கருத்துப் பாசனத்தை எங்கெங்கே தேக்கி வைக்க வேண்டும், எங்கே மடை திறந்து பாயச் செய்ய வேண்டும், ஒரு நெடிலை அல்லது ஒரு குறிலை எங்கு சொருகினால் வாக்கியத்தின் பொருள் மாறும் என்பதெல் லாம் தெரியும் கலை, கற்றுத் தெரியக்கூடிய கலையன்று, கல்லாத கலையாகும். மொழி பெயர்ப்பாளருக்கு உள்ளுணர்வு இருக்கு மானால், இந்தக் கல்லாத கலை கைவரும், வெறும் புலமையினால் கிட்டுவதன்று இது.

எந்த நல்ல மொழிபெயர்ப்பும் அது எழுதப்படுகிற காலத்தி லும், நாட்டிலும் பேசப்படுகிற மொழியில் இருக்க வேண்டுமென் பது மொழி பெயர்ப்பு நிபுணர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள் ளப்பட்ட உண்மை என்று எல். டபிள்யு. டான்காக் (L.W. Tancock) என்பவர் சொல்கிறார். பெரும்பாலும் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆணையம் சட்டங்களைத் தமிழாக்கம் செய்திருக்கிறது.

ஆங்கிலச்சொற்களுக்கு நேரான புதியதமிழ்ச் சொற்களை உண்டு பண்ணுவதற்கு முன், சாமானிய மக்களிடையே உரிய சொற்கள் ஆட்சியில் இருக்கின்றனவா என்பதைத் தீர விசாரித்து, அவ்வாறு ஆட்சியில் சொல்லொன்றும் இல்லையென்று தெரிந்த பிறகே, இந்த ஆணையம் சொல்லாக்கம் செய்வதில் ஈடுபடுகிறது. குருட்டுத் துணிச்சலோடு சொல்லாக்கத்தில் இந்த ஆணையம் இறங்கவில்லை என்பதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். "Cable of Wooden anchor" என்ற சொற்றொடரை மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. ஆங்கில—தமிழ் அகராதிகள், அந்தச் சொற்றொடருக்கு, "மர நங்கூரக் கயிறு" என்று பொருள் கொடுத்திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட காலமாகக் கடலில் கப்பற் பயணம் செய்தும், முத்துக்குளித்தும், கடலோடு ஊடாடிக் கொண்டிருந்த தமிழன், இதற்குத் தனிப் பெயர் இடாமலா இருந்திருப்பான் என்ற ஐயம் ஏற்பட்டதன் பேரில், ஆணையத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் ஒருவரை, சென்னைக் கடற்கரையில் இருக்கும் மீனவர் குப்பத்திற்கு அனுப்பி, ஆராய்ச்சி செய்தோம். நங்கூரத்தைப் பிணைக்கும் கயிற்றைச் "சீனிக்கயிறு" என்று அவர்கள் செல்லப் பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று தெரிந்து, அந்தப்பெயரையே இவ்வாணையம் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளது. இதைப்போலவே, மதுவிலக்குச்சட்டத்தை மொழிபெயர்க்கும்போது, மதுவிலக்குத் துறை அதிகாரிகளின் உதவியாலும், வனச் சட்டத்தை மொழிபெயர்க்கும்போது வனத் துறை அலுவலர்களின் உதவியாலும் அந்தந்தத் துறையில், தமிழ்மக்களால் பயன்படுத்தப்படுகிற பரிபாஷையையும் பச்சைத் தமிழ்ச்சொற்களையும் தேடிக்கண்டுபிடித்து, அவற்றையேஆணையம் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறது. 'Wash' என்பதைச் சாமானியத் தமிழர்கள் "ஊறல்" "என்றும்" கலக்கல்" என்றும் கூறுகிறார்கள். தமிழ் மக்களுடைய நாவில் நடமாடிக் கொண்டிருக்கும் இத்தகைய சொற்களுக்குள்ள ஆற்றல், புதிதாக உண்டாக்கப்படும் சொற்களுக்குக் கிடையாது என்பதை உணர்ந்தே இவ்வாணையம் ஆட்சியில்இருக்கும் சொற்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மிகுந்த நேரத்தையும் கவனத்தையும் செலவழித்திருக்கிறது.

வேறு போக்கு இல்லை என்ற நிலையில்தான் இந்தஆணையம் சொல்லாக்கம் செய்யத் துணிந்திருக்கிறது. அவ்வாறு சொல்லாக்

கம் செய்யும்போதும், தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையிலும், தமிழ் மரபை ஒட்டியுமே புதுச்சொற் களைஉண்டாக்கியிருக்கிறோம்.

''சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மையறிந்து.''

என்று சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் இன்றியமையாத சொல்லையே பயன்படுத்தவேண்டும்என்றுஎச்ச ரிக்கை செய்து விட்டார். சீன ஞானி கன்பூஷியஸும் இன்றி யமையாத சொல்லையே ''ஷிங் மிங்''(Ching Ming) என்று அழைத் தார். ஃப்ரென்சு ஆசிரியர் ஃப்ளோபேரும் (Flaubert) அதை ''மோஷூஸ்த்'' (Mot Juste) என்று அழைத்தார். இன்றியமையாத சொல்லைத்தேர்ந்தெடுப்பதிலே மொழி பெயர்ப்பாளர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்ச் சொற்கள் பல ஆள்வாரற்றுத் தூர்ந்து போயின. அவ் வாறு தூர்ந்து போன சொற்களைத் தூரெடுத்துப்புழக்கத்துக்குக் கொண்டு வந்து நமக்கு இருக்கும் சொற் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது அவசியமாகத் தோன்றுகிறது. உதாரணமாக, பிங்கல நிகண்டில் ''பண்பிற் செயலின் பகுதி வகை'' என்ற பெருந்தலைப் பின் அடியில், ''சொல்லுதல்'' என்ற குறுந்தலைப்பில், 22 சொற் கள் கொண்ட ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலை ஆராய்ந்து பார்க்கும்போது சொல்லும் முறையை 22 நுண்ணிய வகைகளாகப் பிரித்து, ஒவ்வொருவகைக்கும் ஒரு தனிச் சொல்லை உண்டு பண்ணி,ஒரு வகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையேயுள்ள மயிரிழை போன்ற வேறுபாட்டையும் சொல் வேறுபாட்டிலே காட்டி, கருத்து நொய்ம்மையையும், சொல் நொய்ம்மையையும் தமிழர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

''இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல்,
பகர்தல், பன்னல், நவிறல், கத்துதல்,
உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல்,
புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல்,
பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல்,
சொற்றல், ஆடல், சொல்லுதல் என்ப''

என்பது பிங்கல நிகண்டிலுள்ள 2009 ஆம் சூத்திரம்.

பலநூற்றாண்டுகளாக அயல் மொழிகளே தமிழ்நாட்டு நீதி மன்றங்களின் தீர்ப்பு மொழிகளாக இருந்துவிட்டபடியாலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நுணுக்கமான சட்டச் சொற் களைச் சொல்வதற்கு நாம் தமிழைப் பயன்படுத்தாமலே போய் விட்டபடியாலும், மேற்சொன்ன சூத்திரத்தில் கண்டவைபோன்ற ஆயிரக்கணக்கான நொய்தின்நொய்ய தமிழ்ச் சொற்கள், துருப் பிடித்துப் போய், பொருள் கெட்டும், இழிந்தும், பயனற்றுப் போய்விட்டன. ஆகவே சொல்வளத்திற்கிடையே சொற் பஞ்சத் தால் அல்லாடுகிறோம் நாம். புதுச் சொற்களை இரவல் வாங்கு வதற்கு முன், அல்லது புதுச்சொற்களை உண்டாக்குவதற்கு முன் நமது கஜானாவில் பயன்படுத்தப்படாமல் வெறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைப் பயன்படுத்த முயன்றிருக்கிறது இந்த ஆணையம். உதாரணமாக, "Assertion" என்பதை "அறை தல்" என்றும், "Declaration" என்பதை "விளம்பல்" என்றும், "Pronouncement of Judgment" என்பதைத் "தீர்ப்புப் பகர்தல்" என் றும் மொழிபெயர்த்து, துருவேறிப் போன தமிழ்ச் சொற்களைத் துலக்கி, விளக்கமுறச் செய்திருக்கிறது இந்த ஆணையம். மேற் சொன்ன பொருள்களிலே நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் மேற் சொன்ன சொற்களைப் பயன்படுத்துவார்களேயானால், இடைக் காலத்திலேதிமிறி அலைந்தசொற்களை அடக்கி, மூக்கணாங்கயிறு போட்டு, நடை பழக்கி, சொகுசாகக் கருத்துச் சவாரி செய்ய, அவற்றைப் பயன்படுத்திய பெருமை அவர்களுக்குக் கிடைக்கும்.

"Dispose" என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இதன் பொருள் இடத்துக்குத் தக்கவாறு மாறுபடுகிறது. "The Sessions Judge may make provision for the disposal of the case" என்ற வாக்கி யத்தை "செஷன்ஸ் நீதிபதி வழக்கைத் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்" என்று மொழிபெயர்க்க வேண்டி யிருக்கிறது. "Concealment of birth by secret disposal of the dead body" என்ற வாக்கியத்தை "செத்த உடலை ரகசியமாக அப்பு றப்படுத்தி'ப் பிள்ளைப் பேற்றை மறைத்தல்" என்றும், "Proper disposal of cases" என்ற சொற்றொடரை "உரியமுறையில் வழக்கு களைத் தீர்மானித்தல் என்றும், "The appellate court may direct the order to be stayed pending disposal of the appeal" என்ற வாக்கி யத்தை "மேல்முறையீடு 'முடிவு செய்யப்படும்'வரைஅக்கட்டளை நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று மேல்முறையிட்டு நீதிமன்றம்

உத்தரவிடலாம்'' என்றும், ''Assisting in the disposal of stolen property'' என்ற வாசகத்தை ''திருட்டுப் பொருளைப் புறப்படுத்துவதற்கு உதவி செய்தல்'' என்றும், "To dispose of any instrument for the purpose of being used for counterfeiting" என்ற வாசகத்தை, ''கள்ளத்தனமாகத் தயாரிக்கும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட்டுக் கருவி எதனையும் பராதீனம் செய்வதற்கு'' என்றும்,''Being at the disposal of the''Government''என்ற சொற்றொடரை ''அரசின் ஏவலில் இருத்தல்'' என்றும் மொழிபெயர்த்திருக்கிறோம். ''Disposal" என்ற சொல் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு பல்வேறு பொருள்களைக்கொடுக்கிறது, தமிழில்உள்ள ''சும்மா'' என்ற சொல்லைப் போல. ஒரு சொல்லின் பொருள், அது கொண்டிருக்கும் தோழமையைப் பொறுத்திருக்கிறது. செங்கல்லால் வீடு கட்டுவதுபோல,சொல்லைவைத்துவாக்கியங்களைக்கட்டுகிறோம். ஆனால், இந்தச் சொல் செங்கற்கள், தாம் அமைந்திருக்கும் சூழ்நிலையைப்பொறுத்துப்பொருளில் மாறுபடுகின்றன. வீட்டுத்தளத்திலுள்ள செங்கல்லும் செங்கல்தான், கோபுரத்தில் அமைந்துள்ள செங்கல்லும் செங்கல்தான். ஆனால், காட்சியில் எவ்வளவு வேறுபட்டிருக்கின்றன அவை !

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சில ஆங்கிலச் சொற்கள் ஒரு பொருட்கிளவிகள் (Synonyms) போன்று தோன்றும். ஆனால், நுணுகி ஆராயும்போது அவற்றுக்கிடையே நுண்ணிய பொருள் வேறுபாடுகள் இருப்பதை அறியலாம். 'Affirm', 'Confirm', 'Corroborate' என்ற சொற்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. இச்சொற்களுக்கிடையேயுள்ள பொருள் வேறுபாடு மிகவும் சன்னமானது. 'Affirm' என்பதை 'உறுதி செய்' என்றும், 'Confirm' என்பதை 'உறுதிப்படுத்து' என்றும், 'Corroborate' என்பதை 'உறுதியூட்டு' என்றும் இந்த ஆணையம் மொழிபெயர்த்திருக்கிறது. 'உறுதி' அடியாகப் பிறந்த இம்மூன்று சொற்களும், மேற்சொன்ன ஆங்கிலச் சொற்களுக்கு இடையேயுள்ள நுண்ணிய பொருள் வேறுபாடுகளை உரியவாறு எடுத்துநுவல்கின்றன என்றுநம்புகிறோம்.

மற்றொரு குடும்பத்தைச்சேர்ந்த ஆங்கிலச் சொற்களுக்குக் கீழ்க்கண்ட நேர் பதங்களைக் கொடுத்திருக்கிறோம் :—

Allow	..	இடம் கொடு
Permit	..	அனுமதி
Consent	..	சம்மதம்

Suffer .. சகித்துக்கொள்
Concur .. இணங்கு
Sanction .. ஒப்பளிப்புச் செய்
Authorise .. அதிகாரம் அளி

இன்னொரு கோத்திரத்தைச் சேர்ந்த ஆங்கிலச் சொற்களைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறோம்:—

Grant .. கொடை
Reward .. வெகுமதி
Present .. அன்பளிப்பு
Prize .. பரிசு
Award .. அளிப்பு
Donation or Gift .. நன்கொடை

'Becoming void' என்ற சொற்றொடரை 'விழலாதல்' என்று 300 ஆண்டுகளுக்கு முன்பே புதுவை வழக்கறிஞர்கள் தமிழ்ப் படுத்தி வழங்கி வந்திருக்கிறார்கள். இதையொட்டி 'Becoming null and void' என்ற சொற்றொடரை 'வெறிதாகி விழலாதல்' என்று தமிழாக்கம் செய்திருக்கிறோம்.

'Precedent' என்ற சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை. 'Quotation' என்பதை 'மேற்கோள்' என்றும் 'Interpretation'-ஐப் 'பொருள்கோள்' என்றும் 'Ideal'-ஐக் 'குறிக்கோள்' என்றும் சொல்லும் மரபையொட்டி முன்கொள்ளப்பட்டது என்ற கருத்தைத் தெரிவிக்கும் 'Precedent' என்ற சொல்லை 'முற்கோள்' என்ற புதிய சொல்லை உண்டாக்கித் தமிழ்ப்படுத்தியிருக்கிறோம். இது புதிய சொல்லாக இருந்தாலும் இதன் ஒலியும் உருவமும் வெகு காலம் புழங்கி வந்த தமிழ்ச் சொல்லின் ஒலியையும் உருவத்தையும் போன்று இருப்பதால், தமிழர்களும் தமிழ்ச் சட்ட வல்லுநர்களும் இதை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

'Having retrospective effect' என்ற சொற்றொடரை 'முன்னுற இயங்கும் தன்மையதான' என்றும், 'Probabilities and improbabilities of the case' என்ற சொற்றொடரை, 'இந்த வழக்கின் நிகழ்தற்குரிய கூறுகளும் நிகழ்தற்கரிய கூறுகளும்' என்றும் மொழிபெயர்த்திருக்கிறோம்.

'Fact' என்ற சொல்லைத் தமிழ்ப்படுத்துவதற்குமுன் மிகவும் அல்லற்பட்டோம். 'பொருண்மை' என்று அதை மொழிபெயர்ப்

பது தவறு. ஏனென்றால், அது பொருளின் தன்மையை அல்லது கருத்துப் பொருளைச் சுட்டும். 'Fact'-ஐ 'உண்மை' என்று மொழி பெயர்ப்பதும் தவறு; பொய்யே ஒரு 'Fact' ஆக இருக்கும்போது, அதை 'உண்மை' என்று எப்படி மொழிபெயர்ப்பது! வெகுகாலம் சிந்தனை செய்த பிறகு, 'Fact'-ஐச் 'சங்கதி' என்று மொழிபெயர்ப் பதே சரி என்று தோன்றியது. ''என்ன சங்கதி?'', ''கேட்டாயா சங்கதி'', ''பார்த்த சங்கதி'', ''ருசித்த சங்கதி'', ''கொலைசெய்த சங்கதி'', ''தீப்பிடித்த சங்கதி'' என்று பலவகைப்பட்ட பொருள் களில் 'சங்கதி' என்ற சொல்லைத் தமிழர்கள் பயன்படுத்திவருகி றார்கள். இந்தியச் சாட்சியச் சட்டத்தின், 3ஆவது பிரிவில் 'Fact' என்ற சொல்லுக்கு இலக்கணம் கீழ்க்கண்டபடி தரப்பட்டிருக் கிறது:

'சங்கதி' என்ற சொல், பொருள் தந்து உள்ளடக்குவதாவது:--

(1) புலன்களால் அறியக்கூடிய பொருள், பொருள்களின் நிலை, அல்லது பொருள்களின் உறவு எதுவும்;

(2) எவரேனுமொருவரின் உணர்வுக்குத்தெரிகிற மனநிலை எதுவும்.

எடுத்துக்காட்டுகள் —

(ஆ) ஏதோ ஒன்றை ஒரு மனிதர் கேட்டார் அல்லது பார்த் தார் என்பது ஒரு சங்கதி.

(இ) குறிப்பிட்டசொற்களை ஒரு மனிதர் கூறினார் என்பது ஒரு சங்கதி.

இவ்வாறு 'Fact' என்ற சொல்லுக்குப் பொருள் கூறி விட்டு, பலஇடங்களில் அந்தச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறது இந்தியச் சாட்சியச் சட்டம். இந்தச் சட்டத்தில் 'Fact' என்று வரு கிற எந்தச் சந்தர்ப்பத்திலும் 'சங்கதி' என்று அதை மொழி பெயர்க்கும்போது, 'சங்கதி' என்ற சொல் எவ்வளவு பொருத்த மானது,வரப்பிரசாதமாக அல்லவா அது நமக்குக்கிட்டியிருக்கிறது என்பதை உணர முடிகிறது. இந்த ஆணையத்தின் பிரதிநிதிகள், மைசூர்-கருத்தரங்கில் பங்கேற்றுக்கொள்ளப்போனபோது, ஆந்தி ரச்சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும், கேரளச்சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும் 'Fact' என்றசொல்லை, 'சங்கதி' என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்று தெரிந்து மிக உற்சாகம் அடைந்ததோடன்றி, இந்தஆணையத்தின் மொழிபெயர்ப்பு எதிர் பாராத இடங்களிலிருந்தும் உறுதியூட்டம் பெற்று இருக்கிறது என்று உணர்ந்து மகிழ்வுற்றார்கள்.

'ரிவரோல்' (Rivarol) என்ற ஃப்ரெஞ்சு அறிஞர், "What is not clear is not French" (தெளிவில்லாத எதுவானாலும் சரி, அது ஃப்ரெஞ்சு ஆக இருக்க முடியாது) என்று சொல்லித் தம் தாய் மொழியின் தெளிந்த தெளிவை நினைந்து பெருமைப்படுகிறார். கவிதைத்தமிழ், கிரேக்க மொழியைக்காட்டிலும்துல்லியமும்மெருகும் கொண்டது என்று சொல்லி வின்ஸ்லோ என்ற ஆங்கில மொழியியல் அறிஞர் பாராட்டியிருக்கிறார். உரைநடைத் தமிழுக்கும் அந்த அரிய குணங்களைஊட்டவேண்டியது தற்காலத் தமிழறிஞர்களுடைய கடமை. நுண்ணிய சட்டக் கருத்துக்களைத் திறமையோடும், கவனத்தோடும், படைப்பாற்றலோடும் தமிழ்ச் சொற்களில் செலுத்துவதன் வாயிலாக உரைநடைத் தமிழை விரைந்து வளர்ப்பதற்கு நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உண்மையில் 14—11—1976க்குப் பின் தமிழில் எழுதப்படும் குற்ற வழக்குத் தீர்ப்புகளைப் படிக்கும் போது அந்த வாய்ப்பு மிக நன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிகிறது. சட்ட நுண்மைகளும் அறிவியல் சதுரப்பாடுகளும்நிறைந்த வாதப் பிரதிவாதங்களிலும், நீதிமன்றங்களிலும் மேற்குறித்த சொற்களைக்கையாண்டு அவற்றுக்கு ஆட்சிப்பொறுப்பைக்கொடுக்க வேண்டியது சட்ட வல்லுநர்களின் கடமையாகும்.

இந்த அகராதியில் ஆங்கிலச் சட்டச் சொற்களுக்குத் தமிழ்ப் பதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச் சொற்கள் பெரும்பாலும் 'குற்ற விசாரணைமுறைச் சட்டம்' (Criminal Procedure Code) 'இந்தியத் தண்டனைச் சட்டம்' (Indian Penal Code), 'இந்தியச் சாட்சியச் சட்டம்' (Indian Evidence Act), 'உணவுக் கலப்படம்தடுப்புச் சட்டம்' (Prevention of Food Adulteration Act), 'தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம்' (Tamil Nadu Prohibition Act), 'காவற்படைச் சட்டம்' (The Police Act), 'இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்' (Essential Commodities Act), 'தமிழ் நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் சட்டம்' (Tamil Nadu Catering Establishment Act), 'இந்திய வனச் சட்டம்' (Indian Forest Act), 'ஊழல் தடுப்புச் சட்டம்' (The Prevention of Corruption Act), 'குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம்' (Probation of Offenders Act), 'பெண்டிர், சிறுமியர் விபசாரத் தொழில் ஒடுக்குச் சட்டம்' (Suppression of Immoral Traffic in Women and Girls Act), 'கால்நடை அத்துமீறல் சட்டம்' (Cattle

Trespass Act), 'தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம்' (Gold Control Act) ஆகிய பதினான்கு சட்டங்களின் தமிழாக்கத்திலும், இந்திய அரசமைப்பின் (Constitution of India) தமிழாக்கத்திலும்பயன்படுத்தப் பட்டவை. மேற்படி சொற்களுக்குத் தொடர்புடைய வேறு சில கலைச் சொற்களுக்குள்ள நேர் தமிழ்ப் பதங்களும் இந்த அகராதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளுக்கும் வழக்குரைஞர்களுக்கும் சட்டத்தில் அக்கறைகொண்டுள்ள பொது மக்களுக்கும் இந்த அகராதிபயனுள்ளதாக இருக்கும் என்று இந்த ஆணையம் நம்புகிறது.

சட்டங்களை மொழிபெயர்ப்பதற்கு முன்னமேயே மொழிபெயர்ப்பாளர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையக்குழு 1968-ல்ஒரு சட்டச்சொல் அகராதியை வெளியிட்டது. 1976 மே மாதம் நிறுவப்பட்ட இந்தத்தமிழ்நாடுசட்டத்துறைஆட்சிமொழிஆணையம் மேற்சொன்ன 14 சட்டங்களையும் இந்திய அரசமைப்பையும் மொழி பெயர்த்த பின்பே இந்தச் சட்டச் சொல் அகராதியைத் தயார் செய்து, இரண்டாவது பகுதியாக 1979-ல் வெளியிடுகிறது.முதற் பகுதியிலுள்ள கலைச்சொற்களுக்கும் இரண்டாவது பகுதியிலுள்ள கலைச் சொற்களுக்கும் வேறுபாடுகள் சில இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேறுபாடுகள் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, சட்டங்களை மொழிபெயர்க்கும்போது ஏற்பட்ட விதவிதமானபிரச்சினைகளைக்கூட்டுமுயற்சியினால்தீர்த்துப்பெற்றநேரடி அனுபவத்தைப் பயன்படுத்தி இந்தப் பகுதி தொகுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, எளிமையாகவும் இயல்பாகவும் துல்லியமாகவும் தமிழாக்கம் இருந்தால்தான் நடைமுறையில் அது பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பகுதியிலுள்ள சொற்கள் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே முற்றிலும்பொருத்தமானவை என்றுஇந்த ஆணையம் அறுதியிட்டுக்கூறவில்லை. எதிர்கால அனுபவத்தின் அடிப்படையில்இப் பகுதியிலுள்ள சொற்களையும்மாற்ற வேண்டியிருக்கலாம்.வேறு மாற்றங்கள் செய்யும் வரை இந்த இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே இந்த ஆணையம் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்ட சொற்களாக இருந்து வரும்.

இந்தப் பகுதியில் சில வழுக்கள் இருக்கலாம். நாளாவட்டத்தில் நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் தமிழறிஞர்களும் இந்த

வழுக்களைக் களைந்து இன்னும் செம்மையான தமிழ் மொழி பெயர்ப்பை வெளிக்கொணர்வதற்குஆணையத்திற்குஆலோசனைகள் கூறினால், அவ்வாலோசனைகளை நன்றியுடன் பரிசீலனை செய்து, ஏற்றுக்கொள்ளத்தக்க ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறது இந்த ஆணையம்.

எஸ். மகராஜன்,
தலைவர்,
தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்.

சென்னை-2.

மொழிபெயர்ப்புப் பயிற்சிக்கு உதவியாயிருக்கக்கூடிய நூல்களின் பட்டியல்.

1. The Art of Translation—By Theodore Savory—1968 Edition. Published by Jonathan Cape, 30, Bedford Square, London.

2. The Art of Translation—A Symposium Published by the Ministry of Scientific Research & Cultural Affairs, New Delhi.

3. Proceedings of the Third Congress of the International Federation of Translators FIT. 1959.

4. Quality in Translation—Edited by: E. Cary and R. W. Jumpelt. Published by : Symposium Publications Division, Pergamon Press, Oxford, London, New York and Paris.

5. On Translation—By Reuben A. Brower, Published by Harward University Press, New York, 1966.

6. UNESCO Scientific and Technical Translations & Related Aspects of the Language Problem—By J. E. Holmstrom, UNESCO, Paris, 1958.

7. Aspects of Applied Linguistics —By D. P. Pattanayak—1968 Edition, published by Asia Publishing House, Bombay, Calcutta, New Delhi, Madras, Lucknow, Bangalore, London, and New York.

8. Translation in Mediaeval Bulgaria, 1969—Edited by Ashit Chakra Borthy—Published by Indranath Majumdar Subarnarelcha, 73, Mahatma Gandhi Road, Calcutta-9.

9. Aspects of Translation—(Studies in Communication)—Published by Seckar and Warburg, 1958, University College, London

10. Translating—By Ian F. Finlay—1971 Edition, Published by: "Teach Yourself Books", St. Paul's House, Warwick Lane, London, E. C. 4.

11. "BABEL"—Journal of the International Federation of Translators—Under the auspices of UNESCO with Head quarters at Paris.

A

A—ஒரு; ஒவ்வொரு; ஓர்.

A certain—ஒரு சில.

A subsequent offence—ஒவ்வொரு பிந்திய குற்றமும்.

Ab initio—தொடக்கத்திலிருந்தே.

Abandonment—கைவிட்டுவிடுதல்.

Abatement—அற்றுப்போதல்; களைதல்.

Abatement of appeal—மேல்முறையீடு அற்றுப்போதல்.

Abatement of nuisance—தொல்லை களைதல்.

Abbreviation—சுருக்கக்குறியீடு.

Abduct—ஆட்கடத்து.

Abduction—ஆட்கடத்துதல்; ஆளைக் கடத்துதல்.

Abet—உடந்தையாயிரு.

Abetment—உடந்தையாயிருத்தல்.

Abetment of escape of persons arrested—கைது செய்யப்பட்ட ஆட்கள் தப்பிச் செல்ல உடந்தையாயிருத்தல்.

Abettor—உடந்தைக் குற்றவாளி; உடந்தையாளர்.

Abeyance—தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ள நிலை.

Abeyance, keep in—தாற்காலிகமாக நிறுத்தி வை.

Abide by the constitution—அரசமைப்பின் படி ஒழுகு.

Abide by the results of the appeal, it shall—அது மேல்முறையீடு முடிவுகளைப் பொறுத்து இருத்தல் வேண்டும்/ முடிவுகளுக்கு இணங்கி இருத்தல் வேண்டும்.

Abiding by—இணங்கியதாய் இருக்கிற; பொறுத்ததாய் இருக்கிற.

Ability—திறமை.

Abjure—அறவே தவிர்.

Abkari—கலால் (ஆப்க்காரி).

Abnormality—இயல்புக்கு மாறான தன்மை.

Abode—இருப்பிடம்.

Abode, fixed place of—நிலையான இருப்பிடம்.

Abolish—அழி; ஒழி.

Abolition—அழிப்பு; ஒழிப்பு.

Abolition of untouchability—தீண்டாமை ஒழிப்பு.

About that date—அந்தத் தேதிவாக்கில்.

About to make, a complaint, he is—அவர் முறையீடொன்றைச் செய்யவிருக்கிறார்.

Above the rank of (a Sub-Inspector)—(ஓர் உதவி ஆய்வாளருக்கு) மேல்நிலையிலுள்ள மேற்படியிலுள்ள.

Abridge—சுருக்கு.

Abrogate—ரத்து செய்.

Absconding—தலைமறைவாகுதல்.

Absence—இல்லாதிருத்தல்; இல்லாமலிருத்தல்; இல்லாமை; வாராமை.

Absence, by reason of–வாராமை காரணமாக.

Absence of any specific provision to the contrary, in the–குறிப்பிட்ட வகைமுறை எதுவும் எதிர்மாறாக இல்லாதபோது.

Absence of reasonable excuse, in the–நியாயமான காரணம் இல்லாதபோது.

Absent–இல்லாமலிரு ; வராதிரு.

Absolute–நிபந்தனையற்ற; பூரணமான ; வரம்பற்ற.

Absolutely–நிபந்தனையின்றி ; பூரணமாக ; வரம்பற்ற முறையில்.

Abstaining from carrying out–நிறைவேற்றாதொழிதல்; நிறைவேற்றாமல் இருத்தல்.

Abstaining from commission of any such offence–அத்தகைய குற்றம் எதையும் செய்யாமல் இருத்தல்/செய்யாதொழிதல்.

Abstention–செய்யாதிருத்தல் ; செய்யாதொழிதல் ; தவிர்த்தல்.

Abstention from intoxicants–போதையூட்டும் பொருள்களைத் தவிர்த்தல்.

Abstract–சுருக்கக்குறிப்பு; பிரித்தெடு.

Abstracted–பிரித்தெடுக்கப்பட்ட.

Abuse–தகாதமுறையில்செய் ; தவறாகப் பயன்படுத்து.

Abuse of authority–அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்.

Abuse of the process of court–நீதிமுறைக் கட்டளையைத் தவறாகப் பயன்படுத்துதல்/முறைகெட்ட வகையில் பயன்படுத்துதல்.

Academic distinction–கல்வித்துறைச் சிறப்பு.

Accelerate–விரைவுபடுத்து.

Accept–ஏற்றுக்கொள்.

Acceptance of the fees–கட்டணங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

Accepted under the provisions–வகைமுறைகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட.

Acceptor–ஏற்புநர்; ஒத்துக்கொள்பவர்.

Access–அணுகும்வழி; அணுகும் வாய்ப்பு; தொடர்பு; வரப்போக வாய்ப்பு.

Access, direct–நேரடித் தொடர்பு.

Access, open court to which the public may have–பொது மக்கள் வந்து போகக்கூடியதாயுள்ள பகிரங்க மன்றம்.

Accessible–அணுகத்தக்க; போய்வரத்தக்க

Accession, instrument of–இணைப்புச் சாசனம்.

Accession to office–பதவி ஏற்பு.

Accessories–துணைக்கருவிகள்.

Accident–எதிர்பாராத நிகழ்ச்சி; தற்செயநிகழ்ச்சி; விபத்து.

Accidental–எதிர்பாராத; தற்செயலாக.

Accommodation, house–வீட்டு வசதி அளித்தல்.

Accommodation, subject to the availability of–இடம் கிடைக்கும் வசதிக்கு உட்பட்டு

Accompanied by a copy of a record, it shall be–பதிவின் நகலொன்று அதனுடன் சேர்ந்துபோதல் வேண்டும்.

Accompany–சேர்ந்துபோ.

Accomplice–கூட்டுக்குற்றவாளி.

Accord–இணக்கம்; இணங்குமாறுசெய்.

Accordance with the rules, in–விதிகளின்படி; விதிகளுக்கிணங்க.

Accorded sanction, the–அளிக்கப்பட்ட ஒப்பளிப்பு.

According as–. . . . தக்கபடி.

According to that–அதற்கு இணங்க; அதற்கு ஏற்ப.

Accordingly–அ/இங்ஙனமே; அ/இதன்படியே; அ/இவ்வாறே.

Account–கணக்கு.

Account, take into–கவனத்தில் எடுத்துக் கொள்.

Account for–கணக்குக் காட்டு ; முகாந்திரம் காட்டு.

Account of crime, give an–குற்றத்தைப் பற்றிய ஒரு வரலாற்றைக் கூறு.

Account of experiment, an–பரிசோதனையைப்பற்றிய ஒரு விவரிப்பு.

Account (of statement)–(வாக்குமூலத்தின்) விவரம்.

Account satisfactorily–திருப்திகரமான முகாந்திரம் காட்டு.

Accoutrements–உடுப்புகள்.

Accrual–கிட்டுதல்; வந்தடைதல்.

Accrue–கிட்டுகிற; வந்தடைகிற.

Accrued (a legal character)–(சட்டபூர்வமான தகுதி) கிட்டியது.

Accumulate—சேர்த்துவை.

Accusation—குற்றஞ்சுமத்துதல்.

Accused—எதிரி; குற்றஞ்சுமத்தப்பட்டவர்.

Accused appears to be in sound mind—எதிரி புத்தி சுவாதீனமுடையவராகத் தோன்றுகிறார்.

Accused of any offence—ஏதேனும் குற்றம் சுமத்தப்பட்ட.

Accused person—குற்றம் சுமத்தப்பட்டவர்.

Achievement—சாதனை.

Acidification—அமிலத்தன்மையாக்கிவிடுதல்.

Acidifying agent—அமிலத்தன்மையதாக்கும் பொருள்.

Acknowledge—ஒப்புகைஅளி.

Acknowledgement—ஒப்புகை.

Acknowledgement due, by registered post with—ஒப்புகைப் பதிவஞ்சல்மூலம்.

Acknowledgement of allegiance or adherence to a foreign state, if he is under any—அயல்நாட்டு அரசு ஒன்றிடம் விசுவாசம் அல்லது ஒட்டுறவு இருப்பதை எந்த வகையிலேனும் ஒப்புக்கொண்டவராக இருக்கிறவரானால்.

Acquaintance—பரிச்சயம்; பழக்கம்.

Acquainted—பழக்கப்பட்ட; பரிச்சயம் கொண்ட.

Acquainted with the facts of the case—வழக்கின் சங்கதிகளைத் தெரிந்துள்ள.

Acquainted with the rules, thoroughly—விதிகளை நன்கு தெரிந்த.

Acquiescence—குறிப்பிசைவு.

Acquired—ஈட்டப்பட்ட; பெறப்பட்ட.

Acquired, rights—ஈட்டப்பட்ட உரிமைகள்.

Acquiring property—சொத்தை ஈட்டுதல்; சொத்தைப் பெறுதல்.

Acquisition—ஈட்டுதல்.

Acquittal—விடுதலை.

Acquittance—செல்லுச்சீட்டு.

Across a customs frontier, taking it—அதை எடுத்துக்கொண்டு சுங்க எல்லையைக் கடந்து செல்லுதல்.

Act—சட்டம்; செய்கை; செய்சட்டம்; செயல்; தாற்காலிகமாகச் செயலாற்று.

Act abetted—எந்தச் செயலுக்கு உடந்தைச் செயல் உடந்தையாய் இருந்ததோ அந்தச் செயல்; பிரதானச் செயல்.

Act and Law—செய்சட்டமும், சட்டமும்

Act bona fide done—நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செய்கை.

Act constituting an offence—ஒரு குற்றமாக அமைகின்ற செய்கை.

Act in his discretion, to—தம் யுக்தப்படி செயல்படுவதற்கு.

Act in its application to a district—சட்டம் ஒரு மாவட்டத்தின் மீது இயங்குகையில்.

Act in operation—இயக்கத்திலிருக்கிற சட்டம்; செயற்பாட்டிலிருக்கிற சட்டம்.

Act is in operation—சட்டம் இயக்கத்திலிருக்கிறது/செயற்பாட்டிலிருக்கிறது.

Act judicially—நீதிமுறையில் செயற்படு/செயலாற்று.

Act making an offence—குற்றமொன்றை உண்டாக்கும் செய்கை.

Act, nature of the—செய்கையின் தன்மை.

Act of cruelty—கொடுமையான செயல்/செய்கை.

Act of war—போர்ச் செயல்.

Act operates—சட்டம் இயங்குகிறது/செயற்படுகிறது.

Act or omission—செய்கை அல்லது விடுகை.

Act or regulation having the force of law, an—சட்டத்தின் ஆற்றல் கொண்டுள்ள ஒரு செய்சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதி.

Act to consolidate and amend the law, an—சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தியமைப்பதற்கான ஒரு செய்சட்டம்.

Act under the direction of (so and so)—(இன்னாருடைய) ஏவலின்படி செயற்படு.

Acting Chief Justice—தாற்காலிகமாகச் செயலாற்றும்/செயற்படும் தலைமை நீதிபதி.

Acting in any manner inconsistent with his duty—ஏதேனும் ஒரு வகையில் தம்முடைய கடமைக்கு ஒவ்வாது/முரணாக/மாறாகச் செயற்படுதல்.

Action—செய்கை/செயல்; நடவடிக்கை; வழக்கு.

Action taken or thing done—எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட செயல்.

Actionable wrong—வழக்குத் தொடுப்பதற்குரிய தீங்கு.

Active confidence—தீவிர நம்பிக்கை.

Active service of the Government, in the–அரசின் தீவிர ஊழியத்தில்.

Activities like exercise and drill–பயிற்சி, உடற்பயிற்சி போன்ற செயல்கள்/நடவடிக்கைகள்.

Actual–உள்ளபடியான.

Actual charge–உள்ளவாறான/உள்ளபடியான பொறுப்பு.

Actual loss–உள்ளபடியான இழப்பு.

Actual occupancy–உள்ளவாறான/உள்ளபடியான அனுபோகம்.

Actual service, time spent in–உள்ளபடியான ஊழியத்தில் செலவழிக்கப்பட்ட காலம்.

Actually–உள்ளபடியே; உள்ளவாறாகவே.

Actually sitting in a session–ஒரு கூட்டத்தொடரில் உள்ளபடியே அமர்தல்.

Acute shortage–கடுமையான பற்றாக்குறை.

Adaptation–இணக்கப்படுத்துதல்; இணக்கம்; தழுவல்.

Addition–கூட்டல்; சேர்த்தல்; சேர்மானம்.

Additional–கூடுதலான.

Additional Chief Metropolitan Magistrate–பெருநகர் கூடுதல் தலைமை நடுவர்.

Additional conditions-கூடுதல்நிபந்தனைகள்

Additional District Magistrate–மாவட்டக் கூடுதல் நடுவர்.

Additional function–கூடுதல் கடமை.

Additional Public Prosecutor–அரசுக் குற்றத் துறைக் கூடுதல் வழக்குரைஞர்.

Additional Sessions Judge–கூடுதல் செஷன்ஸ் நீதிபதி.

Addition or alteration–கூட்டல் அல்லது மாறுதல்/மாற்றம்.

Addition or omission–சேர்த்தல் அல்லது விடுதல்.

Addition to cancellation, in–ரத்து செய்வதோடுகூட.

Address–உரைநிகழ்த்து; உரையாற்று; விண்ணப்பம் செய்; முகவரி.

Addressed to a person, requisition–ஓர் ஆளுக்கு அனுப்பப்பட்ட/எழுதப்பட்ட கோரிக்கை.

Addressee–முகவரியிடப்பட்டவர்.

Adduce evidence–சாட்சியம் அளி; சாட்சியம் கொடு; சாட்சியம் நல்கு.

Adequacy–போதுதல்.

Adequate–போதிய; போதிய அளவு; போதுமான.

Adequate reasons to the contrary–மாறாகச் செய்வதற்குப் போதிய காரணங்கள்.

Adherence–ஒட்டுறவு; பற்று.

Adhesive stamp–ஒட்டக்கூடிய முத்திரை வில்லை.

Adhoc judge–தனிப்பணி நிமித்த நீதிபதி.

Adjacent–அருகில்.

Adjoining station–அடுத்துள்ள நிலையம்.

Adjourn–ஒத்திவை; தள்ளிவை.

Adjournment–ஒத்திவைத்தல்.

Adjudged–தீர்ப்பளிக்கப்பட்ட; தீர்மானிக்கப்பட்ட.

Adjudication–நீதி முறையில் தீர்மானித்தல்.

Adjudicatory function–நீதிமுறையில் தீர்மானிக்கும் அலுவல்/கடமை.

Adjust–ஈடுசெய்; சரிக்கட்டு; நேரமைவு செய்.

Adjustment–ஈடுசெய்தல்; சரிக்கட்டுதல்; நேரமைவுசெய்தல்.

Administer oath–பிரமாணம் செய்துவை.

Administration–நிர்வாகம்.

Administration of justice–நீதி நிர்வாகம்.

Administration of law–சட்ட நிர்வாகம்.

Administration of poison–நஞ்சிடுதல்.

Administrative expense–நிர்வாகச் செலவு.

Administrative law–நிர்வாகத் துறைச் சட்டம்.

Administrative matters–நிர்வாகத்துறை விஷயங்கள்.

Administrative relations–நிர்வாக உறவுகள்.

Administrative tribunal–நிர்வாகத் துறைத் தீர்ப்பாயம்.

Administratively subordinate–நிர்வாக முறையில் கீழுள்ளவர்.

Administrator–ஆட்சியாளர்.

Administrator-General–அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல்.

Admiralty jurisdiction–கடலியல் அதிகார வரம்பு.

Admissible–அனுமதிக்கத்தக்க; ஏற்கத்தக்க.

Admissible evidence–அனுமதிக்கத் தக்க சாட்சியம்.

Admission--அனுமதித்தல் ; ஏற்புரை; ஏற்றுக் கொள்ளுதல்; சேர்க்கப்படுதல்.

Admission into the Union of a new State–ஒன்றியத்துக்குள் புதிய மாநிலம் ஒன்றைச்-சேர்த்துக் கொள்ளுதல்.

Admission into University–பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுதல்.

Admission of evidence–சாட்சியத்தை/சான்றை அனுமதித்தல்.

Admission of offence–குற்ற ஏற்புரை; குற்றத்தை ஏற்றுக்கொள்ளுதல்.

Admit of, in cases where circumstances do not–சூழ்நிலைகள் இடங்கொடுக்காத சந்தர்ப்பங்களில்.

Admit to bail–ஜாமீனில் விடு.

Admittance–உட்செல்வதற்கான அனுமதி.

Admitting the appeal–மேல்முறையீட்டை விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளுதல்.

Admonish and let off–கண்டிப்பு வழங்கி விட்டுவிடு.

Admonition–கண்டித்தல்; கண்டிப்பு வழங்குதல்.

Adopt–ஏற்றுக்கொள்; கைக்கொள்; சுவீகாரம்எடு ; தத்து எடு.

Adoption-சுவீகாரம்; தத்து.

Adoption, taking in–சுவீகாரம் எடுத்தல்; தத்தெடுத்தல் ; தத்தெடுப்பு.

Adoptive mother–சுவீகாரத்தாய்.

Adult–முதிர்ந்தோர்; வயது வந்தவர்.

Adult suffrage–முதிர்ந்தோர் வாக்குரிமை.

Adulterant–கலப்படம் செய்யவுதவும் பொருள்; கலப்பான்.

Adulterated–கலப்படஞ்செய்யப்பட்ட.

Adulteration–கலப்படம்; கலப்படம் செய்தல்.

Adultery–முறைபிறழ்ந்த புணர்ச்சி.

Adultery, living in–கற்புப்பிறழ்ந்தநிலையில் வாழ்கிற.

Ad valorem–பெறுமான விகிதப்படி.

Advance, make a grant in–ஒரு முன்மானியம் வழங்கு.

Advance money–பணத்தைக் கடனாகக் கொடு.

Advancement–முன்னேற்றம்; மேம்பாடு.

Advantage–சாதகம்.

Advertisement–விளம்பரம்.

Adverse party–எதிர்த் தரப்பினர்; எதிர்த் தரப்பு.

Advice–ஆலோசனை.

Advisable–உசிதமான.

Advising with him, for the purpose of–அவருடன் ஆலோசனை செய்யும் நோக்கத்துடன்.

Advisory body–ஆலோசனைக் குழு.

Advocate–வழக்குரைஞர்.

Advocate-General for the State–மாநிலத்திற்கான தலைமை வழக்குரைஞர்.

Aerodrome–விமான நிலையம்.

Aeronautics–வான்பயணஇயல்.

Affairs of a State–மாநிலமொன்றின் விவகாரங்கள்/காரியங்கள்.

Affecting–பாதிக்கின்ற.

Affection or illwill–விருப்போ, வெறுப்போ.

Affidavit–பிரமாணப் பத்திரம்.

Affirm–உறுதிகூறு; உறுதிசெய்.

Affirmation–உறுதி; உறுதியுரை.

Affix–இடு; ஒட்டு.

Affixing the seal to articles–பொருள்களுக்கு இலச்சினையிடுதல்/முத்திரையிடுதல்.

Afford evidence–சாட்சியம் அளி.

Affray–கலவரம்; சச்சரவு.

Aforesaid–முன்சொல்லப்பட்ட; முன் சொன்ன; மேலே சொல்லப்பட்ட; மேற்சொன்ன.

After–பிறகு ; பின் ; பின்பு ; பின்னர்.

After due admonition–உரிய கண்டிப்பு வழங்கிய பின்பு.

After hearing parties–தரப்பினர்களுக்குக் கேள்வி நல்கிய பின்பு; தரப்பினர்களைக் கேட்ட பின்பு.

After hearing the case–வழக்கை விசாரித்த பின்பு.

After recording the reasons in writing–காரணங்களை எழுத்தில் பதிவு செய்த பின்பு.

After-care organisation–பிற்காப்பு நிறுவனம்.

Against law–சட்டத்திற்கு விரோதமாக.

Agar–கடற்கோரை.

Agency–அமைப்பு; நிறுவனம் ; முகவாண்மை ; ஸ்தாபனம்.

Agent–முகவர்.

Aggregate punishment–மொத்தத் தண்டனை.

Aggression, external–அயல்நாட்டுத் தாக்குதல்.

Aggrieved–குறையுற்ற.

Aggrieved person–குறையுற்றவர்.

Agmark sealed container–அக்மார்க் முத்திரையிடப்பட்ட கொள்கலன்.

Agree–இணங்கு; உடன்படு; ஏற்றுக்கொள்; ஒத்துக்கொள்.

Agree to commit any offence–குற்றம் எதையும் செய்வதற்கு உடன்படு.

Agreement–இணங்குதல்; உடன்பாடு.

Agreement is silent–உடன்பாடு மௌனமாய் இருக்கிறது.

Agricultural holding–வேளாண்மை / விவசாயக் குத்தகை நிலம்.

Agricultural produce–வேளாண்மை மகசூல்.

Agricultural Produce (Grading and Marketing) Act, 1937–1937 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் (தரம் பிரித்தல் மற்றும் குறியிடுதல்) சட்டம்.

Aground, running vessel–கலத்தைத் தரை தட்ட வைத்தல்.

Aid–உதவி ; உதவு.

Aircraft–வானூர்தி; வானூர்திகள்.

Air Force–வான்படை.

Air Force Act–வான்படைச் சட்டம்.

Air-freight–விமானக் கட்டணம்.

Air man (of the airforce)–வான்படை வீரர்.

Air navigation–வான்வெளிப் பயணம்.

Air traffic–வான்வெளிப் போக்குவரவு.

Airways–வான்வெளிப் போக்குவரத்து.

Alarm–எச்சரிக்கை; கிலி; பீதி.

Alcohol–ஆல்க்ககால்.

Alcoholic beverages–ஆல்க்ககால் சேர்ந்த பானங்கள்.

Alcoholic liquors–ஆல்க்ககால் சேர்ந்த மதுபானங்கள்.

Alien–அயல்நாட்டவர்.

Alienated–பராதீனம்செய்யப்பட்ட.

Alive–உயிருடனிருக்கிற.

All-India Judicial Service–அனைத்திந்திய நீதித்துறை ஊழியம்.

All manner of people–எல்லாவித மக்களும்.

All or any of the provisions–வகை முறைகள் அனைத்தும் அல்லது அவற்றில் எவையும்.

Allegation–குறைகூறுதல் ; சொல்லப்பட்ட/ நிரூபணம் செய்யப்படாத கூற்று.

Alleged facts–சொல்லப்பட்ட சங்கதிகள்.

Alleged to have been committed–செய்திருப்பதாகச் சொல்லப்படுகிற.

Allegiance–விசுவாசம்.

Alliance with the Government of India, power in–இந்திய அரசாங்கத்துடன் இணக்கமாக உள்ள அரசு.

Allied products–சார்ந்த பொருள்கள்.

Allocate–குறித்தளி; பகிர்ந்தளி; பங்கிட்டுக் கொடு; பங்கீடுசெய்; பிரித்துக் கொடு.

Allocated to Judicial and executive magistrates–நீதித்துறை, நிர்வாகத்துறை நடுவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட.

Allot–ஒதுக்கு; வழங்கு.

Allotment of land–நிலம் வழங்குதல்.

Allotment of seats–பதவியிடங்கள் ஒதுக்குதல்.

Allow–அனுமதி ; இடங்கொடு.

Allow or disallow–ஏற்றுக்கொள் அல்லது தள்ளுபடி செய்.

Allowance–படி; படித்தொகை.

Allowed, shall be–அளிக்கப்படுதல் வேண்டும்.

Allowed himself to be examined–தம்மைப் பரிசோதிக்க இடங்கொடுத்தார்.

Allowing–அனுமதிக்கின்ற; இடங்கொடுக்கின்ற.

Alloy–உலோகக்கலவை.

Almond–பாதாம்பருப்பு.

Almond oil–பாதாம் எண்ணெய்.

Already–ஏற்கெனவே.

Also–அவ்வாறே; கூட.

Alter–மாற்று; வேறுபடுத்து.

Alter the conditions thereof–அதன் நிபந்தனைகளில் மாறுதல் செய்தல்.

Alteration–மாறுதல்; மாற்றம்; மாற்றம் செய்தல்; மாற்றுதல்.

Alteration of Boundaries Act–எல்லைகள் மாற்றுதல் சட்டம்.

Alternative–இரண்டில் ஒன்று; மாற்று.

Alternatively—இரண்டில் ஒன்றாக; மாற்றாக.

Always—எப்போதுமே.

Amaranth—வாடாமல்லி (கீரைத் தண்டு வகை).

Ambassador—தூதர்.

Ambiguous—ஐயத்திற்குரிய.

Amenable, shall be—உள்ளாதல் வேண்டும்.

Amend—திருத்து.

Amended, shall stand-திருத்தப்பெற்று நிற்கும்.

Amendment—திருத்தம்; திருத்தம் செய்தல்.

Amends—ஈடு; நஷ்ட ஈடு.

Amenity—வசதி.

Amin—அமீனு.

Ammunition—போர்த்தளவாடங்கள்; யுத்தத் தளவாடங்கள்; வெடிமருந்து, குண்டு முதலியன.

Among other matters-இதர விஷயங்களோடு.

Among states—மாநிலங்களுக்கிடையே.

Amongst all the peoples of India—இந்திய மக்கள் அனைவரிடையேயும்.

Amongst themselves, from—தங்களுக்குள்ளிருந்தே.

Amount as the State Government may by notification specify—மாநில அரசாங்கம் அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கலாகும் தொகை.

Amusements—வேடிக்கை விளையாட்டுகள். பொழுதுபோக்குகள்.

Analysis—பகுப்பாய்வு.

Analysis, chemical—இரசாயனப் பகுப்பாய்வு.

Analyst—பகுப்பாய்வாளர்.

Ancient customs—பண்டைய வழக்கங்கள்.

Ancient Monuments and Archaeological Sites and Remains Act-பழமையான/தொன்மையான நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் ஆய்வு மனைகள் மற்றும் எஞ்சி நிற்பவைகள் சட்டம்.

Ancillary—துணை; துணையான.

Ancillary matters—துணைக் காரியங்கள்; துணை விஷயங்கள்.

Ancillary powers—துணை அதிகாரங்கள்.

Ancillary purpose—துணை நோக்கம்.

And—அல்லது ; ஆனால்; எனவே; எனினும்; பின்னர்; மற்றும்; மேலும்.

Anglo-Indian community-ஆங்கிலோ—இந்தியர் சமூகம்.

Animal—பிராணி; விலங்கு.

Animal husbandry—கால்நடைப் பராமரிப்பு.

Animation—உயிரூட்டுதல்; எழுச்சியூட்டுதல்.

Animosity—பகைமை; விரோதம்.

Annatto—காவி விதை.

Annexed—இணைக்கப்பட்ட.

Annexure—பின்னிணைப்பு.

Annoyance—தொல்லை.

Annual administration report—நிர்வாக ஆண்டறிக்கை.

Annual financial statement—வருடாந்திர நிதி விவர அறிக்கை.

Annual payment—வருடாந்திரச் செலுத்துகை.

Annual returns—ஆண்டு விவர அறிக்கைகள்.

Annually—ஆண்டுதோறும்.

Annuities—வருடாந்திரத் தொகை.

Annul—பயனற்றதாக்கு; ரத்து செய்.

Annulment—பயனற்றதாக்குதல்; ரத்து செய்தல்.

Anonymous communication—அநாமதேயக் கடிதம்; மொட்டைக்கடிதம்.

Answerable, he is not—அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவராகார்.

Antecedents—முன்வரலாறு.

Antedate—முந்தின தேதியிடு.

Anthropology—மானிட இயல்.

Anticipation—எதிர்பார்த்தல்.

Anti-oxidants—எதிர் ஆக்ஸீகரணிகள்.

Any—எந்த; எல்லா; ஒவ்வொரு.

Any case, in—எது எப்படியிருந்தாலும்; எந்த நிலைமையிலும்.

Any of the acts—சட்டங்களில் எதுவும்; சட்டங்களில் எவையும்.

Any other-மற்ற எந்த; மற்றைய; வேறெந்த

Any other class of commodity—வேறு வகைப் பண்டம் எதுவும்.

Apartment—அறை.

Aperture—துளை.

Apology—மன்னிப்புக் கோரல்.

Apparatus—சாதனம்.

Functions exercisable–ஆற்றிவரத்தக்க கடமைகள்.
Fund–நிதியம்.
Fund charges, sinking–கடனடைப்பு நிதியச் செலவுகள்.
Fund of India, consolidated–இந்தியாவின் திரள் நிதியம்.
Fund, contingent–எதிர்பாராச் செலவு நிதியம்.
Fundamental duties–அடிப்படைக் கடமைகள்.
Fundamental rights–அடிப்படை உரிமைகள்.
Funeral ceremonies–ஈமச் சடங்குகள்.
Funeral rites–ஈமக்கிரியைகள்.
Furiously–மூர்க்கத்தனமாக.
Furnish–அளி; கொடு ; தா.
Furnishing of information–தகவல் கொடுத்தல்/தருதல்.
Furnishing returns–விவரஅறிக்கைகளைக் கொடுத்தல்
Furniture–தளவாடங்கள்.
Further–மேலும்; மேற்கொண்டும்.
Further amendment–மேற்கொண்டு திருத்தம் செய்தல்.
Further employment–மேற்கொண்டு வேலையில் அமர்த்தல்.
Further order, by a–மேலுமொரு கட்டளை வாயிலாக.
Further orders, until–மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கும் வரையில்.
Further period–கூடுதல் காலஅளவு.
Further period of one year, for a–மேலும் ஓராண்டுக் கால அளவுக்கு.
Further powers–கூடுதலான அதிகாரங்கள்.
Further provisions may be made–மேற்கொண்டும் வகைமுறைகள் செய்யப்படலாம்.
Futures market–வாய்தாவியாபாரச் சந்தை

G

Gain—ஆதாயம்.
Gained experience—கிட்டிய அனுபவம்.
Gallic acid—காலிக் அமிலம்.
Galvanised bucket—நாகமுலாம் பூசப்பட்ட வாளி.
Gambling—சூதாடுதல்.
Game—வேட்டை விலங்கு; விளையாட்டு
Game of chance—அதிர்ஷ்ட விளையாட்டு.
Game sanctuary—வேட்டை விலங்குப் புகலிடம்
Gaming—சூதாட்டம்.
Gaming Act—சூதாட்டச் சட்டம்.
Gaming house—சூதாட்ட விடுதி.
Gang of dacoits—கூட்டுக் கொள்ளையர் கும்பல்.
Ganja—கஞ்சா.
Garb—உடை.
Garlic—உள்ளிப்பூண்டு, வெள்ளைப்பூண்டு.
Gas—வாயு.
Gas works—வாயு உற்பத்திச் சாலை.
Gauge net—கம்பி வலை.
Gazette—அரசிதழ்.
Gazette, extraordinary—சிறப்பு அரசிதழ்.
Gazette, official—அதிகார பூர்வமான அரசிதழ்.
Gazetted officer—அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்.
Gelatine—ஊன்பசை; பசைப்பொருள்.
Gelding—காயடிக்கப்பட்ட குதிரைகள்.
Gender—பால்.
General authority—பொது அதிகாரம்.
General character—பொது நடத்தை.
General Clauses Act—பொது வகைமுறைகள் சட்டம்.
General control—பொதுப்படையான கட்டுப்பாடு.
General disposition—பொது இயல்பு.
General election—பொதுத் தேர்தல்.
General importance—பொது முக்கியத்துவம்.
General insurance business—பொதுக் காப்பீடு அலுவல்.
General interest—பொது அக்கறை.
General management—பொது மேலாண்மை.
General Police District—பொதுக்காவல் மாவட்டம்.
General Public—பொதுப்படையான பொது மக்கள்; பொதுமக்கள்.
General result—பொதுவாகப்பெறப்படுவது; பொதுவான விளைவு.
General tax—பொது வரி.
Generality—பொதுப்பாங்கு ; பொதுவகை.
Generality of the foregoing powers, in particular and without prejudice to the—குறிப்பாகவும் மேற்சொல்லப்பட்ட அதிகாரங்களின் பொதுப்பாங்குக்குப் பாதகமின்றியும்.
Generally—பொதுவாக.

Generally or in relation to a specified state—பொதுவாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் தொடர்பாகவோ.

Generally or specially notify—பொதுவாகவோ அல்லது குறிப்பிட்டோ அறிக்கை செய்.

Generation of electricity—மின்சார உற்பத்தி.

Genius of the language—மொழியின் தனி இயல்பு.

Genuine—அசல் ; உண்மையான.

Genuine documents—மெய்யான பத்திரங்கள்.

Genus—இனம்.

Geographical divisions of the world—உலகின் புவியியல் பிரிவுகள்.

Geological Survey of India—இந்தியப் புவியமைப்பியல் அளவைத்துறை.

Gesture—சைகை.

Ghat—படித்துறை.

Gift—நன்கொடை.

Ginned or unginned cotton—கொட்டை நீக்கப்பட்ட அல்லது கொட்டை நீக்கப்படாத பருத்தி.

Girdle—பட்டையில் வளையம்வெட்டுதல்.

Girl—சிறுமி.

Give advice—ஆலோசனை வழங்கு/கொடு.

Give effect—அமல்படுத்து; செயற்படுத்து; நிறைவேற்று.

Give immediate information—உடனடியாகத் தகவல் தெரிவி.

Given time and place—குறித்த நேரமும் இடமும்.

Giving intoxicating liquor or dangerous drug—போதையூட்டும் மதுவை அல்லது அபாயகரமான மருந்துச்சரக்கைத் தருதல்.

Giving opportunity of being heard—கேள்வி வாய்ப்பு நல்குதல்.

Giving or tendering—கொடுத்தல் அல்லது கொடுக்கமுற்படுதல்.

Giving preference—முதற் சலுகை/முன்னுரிமை அளித்தல்.

Giving rise to a presumption—ஓர் அனுமானம் எழும்படி செய்தல்.

Glazing—பளபளப்பூட்டுதல்.

Globules—சிறு உருண்டைகள்.

Goat—வெள்ளாடு.

Goldsmith—பொற்கொல்லர்.

Good and sufficientcause—சரியானதும் போதுமானதுமான காரணம்.

Good behaviour—நன்னடத்தை.

Good conduct—நல்லொழுக்கம்; நன்னடத்தை.

Good consideration—சரியான மறுபயன் ; பிரதி பிரயோஜனம்.

Good faith—நல்லெண்ணம்.

Good government—நல்லரசாங்கம்; நல்லாட்சி.

Goods—சரக்குகள்; சாமான்கள் ; பண்டங்கள்; பொருள்கள்.

Governance—ஆட்சிமுறை.

Governed by law, shall—சட்டத்தால் ஆளப்படுதல் வேண்டும்/ஆகும்.

Governing body—ஆட்சிக் குழுமம்.

Government—அரசாங்கம்.

Government agency—அரசாங்க முகவாண்மை.

Government, as by established—சட்டப்படி நிறுவப்பட்டுள்ளதான அரசாங்கம்.

Government may by notification declare—அரசாங்கம் அறிவிக்கை மூலமாக விளம்பலாம்.

Government of India Act, 1935— 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம்.

Government order—அரசாணை.

Governor—ஆளுநர்.

Governor-General—ஆளுநர் தலைவர்; கவர்னர்-ஜெனரல்.

Governor in Council—மன்றத்தமர் ஆளுநர்.

Grade—படிநிலை.

Graded basis—படிக்கிரம அடிப்படை.

Graduate—பட்டதாரி.

Grain pit—தானியக் கிடங்கு.

Grammatical variations and cognate expressions, its—அதன் இலக்கண வேறுபாடுகளும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களும்.

Gram powder—பருப்புத் தூள்.

Grant—அளி; வழங்கு ; கொடை ; மானியம்.

Grant-in-advance—முன்மானியம்.

Grant-in-aid—உதவி மானியம்.

Grant of bail—ஜாமீன் வழங்குதல்.

Granular powder—குறுணைத் தூள்.

Granule—குறுணை.

Gratification—கைக்கூலி.

Gratification illegal—சட்டவிரோதமான கைக்கூலி.

Gratifying unnatural lust—இயற்கைக்கு மாறான காம இச்சையைத் திருப்தி செய்து கொள்ளுதல்.

Gratuity—பணிக்கொடை.

Grave and sudden provocation—கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டுதல்.

Grave situation—அபாயகரமான நிலை.

Gravel—சரளைக்கல்.

Graze—மேய்.

Grazing ground—மேய்ச்சல் தரை.

Green coffee—பச்சைக் காப்பிக்கொட்டை.

Grievance—குறை.

Grievous disease—கொடிய நோய்.

Grievous hurt—கொடுங்காயம்.

Gross sum—மொத்தத் தொகை,

Gross-negligence-படு அசட்டை.

Ground—ஆதாரம் ; காரணம்.

Ground coffee—அரைக்கப்பட்ட காப்பி.

Ground of suspicion—சந்தேகப்படுவதற்குக் காரணம்.

Grounds of appeal—மேல்முறையீட்டுக்கான அடிப்படையாகவுள்ள காரணங்கள் மேல் முறையீட்டு அடிப்படைக் காரணங்கள்.

Grounds for arrest—கைது செய்தலுக்கான காரணங்கள்.

Group-தொகுதி; தொகுதியினர்.

Group, guarding—காவற்குழு.

Growth—வளர்ச்சி.

Guarantee—உத்தரவாதம்.

Guaranteed—உத்தரவாதமளிக்கப்பட்ட.

Guarantor—உத்தரவாதி.

Guardian—காப்பாளர் ; பேணுநர்.

Guardian passes—காப்பாண்மை மாறுதல்.

Guardians and Wards Act, 1890—1890ஆம் ஆண்டு காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளார் சட்டம்.

Guardianship—காப்பாண்மை.

Guidance—வழிகாட்டுதல்.

Guidance and direction, under his—அவரது தலைமையின்கீழும் ஏவலின்படியும்.

Guided by the legal provisions, he shall be—சட்டபூர்வமான வகைமுறைகளால் அவர் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

Guilty, found—குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்ட.

H

Habeas Corpus, writ of— 'ஆளைக் கொணர்க' எனும் நீதிப்பேராணை.

Habitual— வழக்கமான; வாடிக்கையான.

Habitual dealing—வாடிக்கையாக வியாபாரம் செய்தல்.

Habitual offender—வாடிக்கைக் குற்றவாளி.

Habitually—வாடிக்கையாக.

Habitually resident— வழக்கமாகக் குடியிருப்புக்கொண்டிருக்கிற.

Hair Cutting Saloon—முடிவெட்டும் நிலையம்.

Hand, a document under his—அவருடைய கையொப்பமிடப்பட்ட பத்திரம்.

Hand, by writing under his—அவர் தம் கையொப்பமிட்ட எழுத்து மூலமாக.

Handwriting—கையெழுத்து.

Hanged by the neck till he be dead, he be—அவர் சாகும் வரையில் (கழுத்துவழி) தூக்கிலிடப்படுதல் வேண்டும்.

Harbouring—காப்பளித்தல் ; புகலளித்தல்.

Harbouring germs—கிருமிகளுக்கு இடம் கொடுத்தல்.

Hard boiled sugar—முறுகக் காய்ச்சிய சர்க்கரை.

Harm—தீங்கு.

Harmful—தீங்குவிளைவிக்கிற; தீய.

Harmful impurities—தீங்கு விளைவிக்கும் தூய்மையற்ற பொருள்கள்.

Harmful publication—தீங்கு விளைவிக்கும் வெளியீடு.

Harmless—தீங்கு விளைவிக்காத.

Harmony—இசைவு.

Harvesting operation—அறுவடை வேலைகள்.

Hatred—குரோதம்; வெறுப்பு.

Having actual possession and control—உள்ளபடியே கைவசத்திலும் ஆளுகையிலும் வைத்திருத்தல்.

Having in possession—அனுபோகத்தில் வைத்திருத்தல்.

Having jurisdiction, court—அதிகார வரம்பு பெற்றிருக்கிற நீதிமன்றம்.

Having reason to believe—நம்புவதற்குக் காரணம் பெற்றிருத்தல்.

Having regard to the special circumstances of the case—வழக்கின் தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு.

Having retrospective effect—முன்னுற இயங்கும் தன்மை கொண்டுள்ள.

Having the care of—பொறுப்பினைக் கொண்டிருக்கிற.

Having the force of law—சட்டத்தின் ஆற்றலைப்பெற்றிருக்கிற/கொண்டுள்ள.

Hawker—தெருவணிகர்

Hazardous —அபாயகரமான.

Hazardous employment—அபாயகரமான வேலை.

Head clerk—தலைமை எழுத்தர்.

Head of account—கணக்குத் தலைப்பு.

Head of cattle, for every—கால்நடை ஒவ்வொன்றிற்கும்.

Head of charge, every—குற்றச்சாட்டின் தலைப்பு ஒவ்வொன்றும்.

Head of department— துறைத் தலைவர்.

Headings—தலைப்புகள்.

Headman of a village—கிராம நாட்டாண்மைக்காரர்; கிராம மணியக்காரர்.

Health—உடல் நலம்; சுகாதாரம்.

Health and strength—உடல்நலமும் வலிமையும்.

Health administration—சுகாதாரத்துறை நிர்வாகம்.

Health Officer—சுகாதார அலுவலர்.

Health of the Community—சமூகத்தின் ஆரோக்கியம்.

Healthy manner, in a—ஆரோக்கியமான ஒரு முறையில்.

Healthy occupation—ஆரோக்கியமான தொழில்.

Heard of for seven years, person who was not —ஏழாண்டு காலத்திற்குக் கேள்விப் படப்படாதவர்.

Hearing-கேட்டல்;கேட்பு;கேள்வி வாய்தா.

Hearing, giving a—கேட்பு நல்குதல்; கேள்வி நல்குதல்.

Hearing and presence, in his—அவரது கேட்பிலும் முன்னிலையிலும்.

Hearing of the case—வழக்கு விசாரணை; வழக்கைக் கேட்டல்.

Hearing of the case, next—வழக்கின் அடுத்த வாய்தா.

Hearing the parties—தரப்பினர்களைக் கேட்டல்.

Heat of passion, in the—உணர்ச்சி வேகத்தில்.

Heavy—கனமான; கெட்டியான; பளுவான.

Hedge—புதர்வேலி.

Heir— வாரிசு.

Hemp plant—கஞ்சாச் செடி.

Hereditary—பரம்பரை.

Hereafter—இதன்பின்பு.

Hereby—இதன்மூலம்; இதன்வாயிலாக.

Here-in-after—இதன் பின்பு இதில், இதில் இதற்குப் பின்பு.

Hereinafter contained—இதன்பின் இதில் அடங்கியுள்ள.

Hereinafter referred to—இதற்குப்பின் இதில் குறிப்பிடப்படுகின்ற.

Here-in-before provided—இதற்குமுன் இதில் வகைசெய்யப்பட்டுள்ள.

Here-infail not—இதில் தவறுதல் ஆகாது.

Heritage—பாரம்பரியம்.

Hermit—துறவி.

Hierarchy of courts—நீதிமன்றங்களின் படிக் கட்டுமுறையமைப்பு.

High Court—உயர்நீதி மன்றம்.

High Court functioning as such—உயர்நீதி மன்றம் என்ற முறையில் இயங்கும் உயர்நீதி மன்றம்.

High seas—ஆழ்கடல்.

Higher authority—உயர் அதிகார ஆயம் ; உயர் அதிகாரி.

Higher education—உயர் கல்வி.

Higher level—மேல்நிலை.

Highest character—மிகஉயர்ந்த குண இயல்பு.

Highways—நெடுஞ்சாலை.

Hill areas—மலைப்பிரதேசம்.

Hilly Tracts—மலைப்பாங்கான இடங்கள்.

Hindu Religious institution—இந்து சமய நிறுவனம்.

Hire—வாடகை.

Hiring—கூலிக்கமர்த்தல் ; வாடகைக்கு எடுத்தல்.

His Majesty, the King—மாட்சிமை தங்கிய மன்னர்பிரான்.

His Majesty in council—மன்றத்தமர் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான்.

Historic interest of —வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த.

Historical Monuments—வரலாற்றுப் புகழ் பெற்ற நினைவுச் சின்னங்கள்.

Hoarding and profiteering—பதுக்குதலும் கொள்ளைலாபம் அடித்தலும்.

Hold—தீர்மானி; முடிவுகட்டு; வகி; வைத்திரு; வைத்துக்கொள்.

Hold investigation—புலனாய்வு செய்.

Hold sitting, the court shall—நீதிமன்றம் அமர்தல் வேண்டும்.

Holder of license—உரிமமுடையவர்; உரிமம் வைத்திருப்பவர்.

Holder of office—பதவி வகிப்பவர்.

Holding entertainment—கேளிக்கை நடத்துதல்.

Holding office—பதவி வகித்தல்; பதவி வகிக்கும்.

Holiday—விடுமுறை நாள்.

Hollowed—குடையப்பட்ட.

Homestead—வீடும் வீடு சார்ந்த இடமும்.

Homicide—மரணம் விளைவித்தல்.

Homicide not amounting to murder, culpable—கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம்.

Honorary officer—கௌரவ அலுவலர்.

Honourable relation—மாண்பு வாய்ந்த உறவு.

Horrible nature—திகிலூட்டும் தன்மை.

Horse whipping—குதிரைச் சவுக்கால் அடித்தல்.

Horticulture—தோட்ட வேளாண்மை.

Hose pipe—ஒசி குழாய்.

Hospital—மருத்துவ மனை.

Hostel, student—மாணவர் விடுதி.

Hostilities—பூசல்கள்; போர் நிகழ்ச்சிகள்.

Hotel—உணவகம்.

Hotel Industry—உணவகத் தொழில்.

Hours of work—வேலை மணிகள்.

Hours, at all—எல்லா நேரங்களிலும்.

House accommodation—வீட்டு வசதி.

House-breaking—கன்னமிடுதல்.

Houses of the Legislature—சட்டமன்ற அவைகள்.

House of the People—மக்கள் பேரவை.

House-trespass—வீட்டில் அத்துமீறிச் செல்லுதல்; வீட்டிற்குள் அத்து மீறி நுழைதல்.

However—எவ்வாறாயினும்; எவ்விதத்திலும்.

Human agency—மனித முயற்சி.

Human being—மானிடப் பிராணி.

Human body—மனித உடல்.

Human conduct—மானிட நடத்தை.

Human consumption, fit for—மனிதர் அருந்துகைக்குத் தகுதியான; மனிதர் உட்கொள்ளுகைக்குத் தகுதியான; மனிதர் நுகர்தலுக்குத் தகுதியான.

Human corpse—மனிதப் பிரேதம்.

Human dwelling—மனிதக் குடியிருப்பு.

Human fear—மானிட அச்சம்.

Human food—மனித உணவு.

Humane, just and—நியாயமும் பரிவுமுள்ள.

Humanism—மனிதாபிமானப் பண்பு.

Hurt—காயம்.

Hurt, grievous—கொடுங்காயம்.

Hydrogenated Vegetable oil—ஹைட்ரஜன் ஊட்டப்பட்ட தாவர எண்ணெய்.

I

I,........A, B, declare—(அ), (ஆ)........ ஆகிய நான் விளம்புகிறேன்.

Ice candy—பனிக் கற்கண்டு.

Ice-house—பனிக்கட்டிச் சாலை.

Icing sugar—மேற்பொதிகின்ற கெட்டிச் சர்க்கரை.

Ideal—இலட்சியம் ; குறிக்கோள்.

Identification—அடையாளங் காட்டுதல் ; இனங் காட்டுதல்.

Identification of areas—பிரதேசங்களைக் கண்டறிதல். (குறித்தறிதல்).

Identity—தனித்தன்மை.

Identity card—அடையாள அட்டை.

Idiot—அறிவிலி.

Idol—விக்கிரகம்.

If and in so far as the case involves any question—வழக்கில் பிரச்சினை எதுவும் எழுமேயானாலும் அவ்வாறு எழுகின்ற அளவுக்கும்.

If and when so required—அவ்வாறு வேண்டுறுத்தப்பட்டாலும் வேண்டுறுத்தப் படும்போதும்.

If he considers it necessary for the investigation of the case—வழக்கின் புலனாய்வுக்கு அவசியமென்று அவர் கருதினால்.

If he thinks fit—அவர் பொருத்தமென நினைத்தால்.

If it is of opinion it is expedient so to do—அவ்வாறு செய்வது நலமென அது கருதும் பொழுது.

If possible—சாத்தியமானால்.

If practicable—நடைமுறையில் இயலுமானால்.

If such act would have constituted an offence—அத்தகைய செய்கையானது ஒரு குற்றமாயிருந்திருக்கும் பட்சத்தில்.

Illegal—சட்டத்துக்கு முரணான ; சட்ட விரோதமான.

Illegal act—சட்டத்துக்கு முரணான செய்கை; சட்ட விரோதமான செயல்.

Illegal gratification—சட்ட விரோதமான கைக்கூலி.

Illegal or corrupt practice—சட்ட விரோதமான அல்லது ஊழலான நடவடிக்கை.

Illegality—சட்ட சீலமின்மை ; சட்ட விரோதத் தன்மை ; சட்ட விரோதப் பாங்கு ; சட்ட விரோதப்பாடு.

Illegible characters—தெளிவற்ற எழுத்துக்கள்.

Illegible, rendering document—பத்திரத்தை விளங்காதபடி செய்துவிடுதல்.

Illegitimate—முறைதவறிப் பிறந்த.

Illicit intercourse—முறையற்ற உடலுறவு.

Illness—நோய்.

Illtreat—கொடுமையாக நடத்து.

Illustrations—எடுத்துக்காட்டுகள்.

Ill-will—கெட்ட எண்ணம்; வெறுப்பு.

Imitation—போலச் செய்தல் ; போலித் தோற்றம் ; போலியான அமைப்பு ; போன்றது.

Immaterial error—சாரமற்ற பிழை ; பொருட்டில்லாத பிழை.

Immature understanding, child of—புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாத குழந்தை.

Immediate action, take—உடனடியாக நடவடிக்கை எடு.

Immediate possession—உடனடி அனுபோகம்.

Immediate presence—நேரடி முன்னிலை.

Immediately—அடுத்து ; உடனடியாக.

Immediately after—அடுத்துப் பின்பு.

Immediately before—அடுத்து முன்பு.

Immediately before such commencement—அத்தகைய தொடக்கத்திற்கு அடுத்து முன்பு.

Immediately preceding—அடுத்து முந்தி.

Immediately succeeding-அடுத்துப் பின்வரும்.

Immediately succeeding working day—அடுத்துப் பின்வரும் வேலை நாள்.

Imminent—உடனடி ; உடனடியாக நிகழக்கூடிய.

Imminent danger—விரைவில் நிகழவிருக்கிற அபாயம்.

Imminent danger of war—போர் உடனடியாக நிகழவிருக்கிற ஆபத்துநிலை.

Immoral—ஒழுக்கங்கெட்ட.

Immoral condition—ஒழுக்கங்கெட்ட நிலைமை.

Immoral traffic—விபசாரத் தொழில்.

Immovable property—அசையாச் சொத்து ; அசையாப் பொருள்.

Immunities—ஏமங்கள்.

Impair—பழுதாக்கு.

Impart—அளி.

Impartial inquiry—ஓரவஞ்சகமற்ற பரிசீலனை ; பாரபட்சமற்ற பரிசீலனை.

Impartiality—ஓரவஞ்சகமின்மை ; நடுவு நிலைமை.

Impeachment—பெருங்குற்றச்சாட்டு.

Impeachment proceedings—பெருங்குற்றச் சாட்டு நடவடிக்கைகள்.

Impeding—தடை செய்தல்.

Imperial War Museum—இம்பீரியல் போர்ப் பொருட்காட்சியகம்.

Implead—நடவடிக்கை எடு.

Implead as party—தரப்பினராகச் சேர்.

Implement—செயற்படுத்து ; நிறைவேற்று ; கருவி ; சாதனம்.

Implementing measures—நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

Implicating—குற்றப்படுத்துதல்.

Implied—உட்கிடையான ; குறிப்பான.

Implied permission—உட்கிடையான அனுமதி.

Import—இறக்குமதி ; பொருள்.

Importance—முக்கியத்துவம்.

Importation—இறக்குமதி செய்தல்.

Importing the plural number, words-பன்மையைக் குறிக்கும் சொற்கள்.

Impose—சுமத்து ; விதி.

Imposing such conditions as it deems necessary-அவசியமெனஅது கருதும் நிபந்தனைகளைச் சுமத்துதல்.

Imposing duties—கடமைகளைச் சுமத்துதல்

Impossibilities, possibilities and—நிகழ்வுறு கூறுகளும், நிகழ்வுறாக் கூறுகளும்.

Impossibility—அசாத்தியம் ; நிகழ இயலாத தன்மை.

Impossible-அசாத்தியமான; நிகழ இயலாத.

Impost—தீர்வைச் சுமை.

Imposter—ஆள்மாறாட்டம் செய்பவர்.

Impracticable—நடைமுறை சாத்தியமற்றது.

Impounded cattle--பட்டியிலடைக்கப்பெற்ற கால்நடை.

Impounding-பட்டியிலடைத்தல்; பற்றுகை.

Impressed upon such stamp, any mark put or—அத்தகைய முத்திரையின்மேல் இடப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட குறி எதையும்.

Impression, finger--விரல் பதிவு.

Impression, mental—மனத்தில் பட்டது ; மனத்தில் பதிந்தது.

Impression of the seal—முத்திரைப் பதிவு.

Imprest—வசக்கட்டு.

Imprisoning—சிறைவைத்தல்.

Imprisonment—சிறைத்தண்டனை ; சிறைவாசம்.

Imprisonment extending to a quarter part of the longest term provided for the offence—எவ்வளவு அதிக கால அளவுக்கு விதிக்கலாம் என்று வகை செய்யப்பட்டிருக்கிறதோ

அந்தக் கால அளவில் கால் பகுதி வரை நீடிக்கும் சிறைத்தண்டனை.

Imprisonment of either description—சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்று.

Imprisonment of either description for a term which may extend to five years and shall also be liable to fine, shall be punished with-ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒருகால அளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மேலும் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும்.

Imprisonment of either description for a term which may extend to three years or with fine or with both, shall be punished with—மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஏதாவது ஒன்றோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துக் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

Imprisonment for life, sentence of—ஆயுள் சிறைவாசம்; ஆயுள் தண்டனை.

Improbabilities—நிகழ்தற்கரிய கூறுகள் நிகழ்தற்கரியன.

Improbabilities and probabilities—நிகழ்தற்கரிய கூறுகளும் நிகழ்தற்குரிய கூறுகளும்.

Improbable—நிகழ்தற்கரிய.

Improper arrest, effecting—முறைகேடாகக் கைது செய்தல்.

Improper questions-முறையற்ற கேள்விகள்.

Improvement—அபிவிருத்தி; மேம்பாடு; வளர்ச்சி.

Improvement of livestock—கால்நடை அபிவிருத்தி.

Improvement trust-மேம்பாட்டுக் கட்டளை.

Impure mind, a man of—தூய்மையற்ற மனதுடைய ஒரு மனிதர்.

Imputation—பழிச்சாட்டு ; பழிசுமத்தல்.

In a locality reasonably convenient—நியாயமான அளவில் வசதியாக உள்ள ஒரு வட்டாரத்தில்.

In a proper case—ஏற்றதொரு சந்தர்ப்பத்தில்.

In accordance with—இணக்கமாக; இணங்க; இணங்கிய ; ஏற்ப ; படி ; படியாக.

In accordance with law—சட்டத்தின்படி ; சட்டத்திற்கேற்ப.

In addition to or in lieu of a sentence—ஒரு தண்டனையோடுங்கூட அல்லது அதற்குப் பதிலாக.

In addition thereto—அதோடுகூட.

In addition to any penalty—தண்டம் எதனோடுங்கூட.

In all cases—எல்லாச் சந்தர்ப்பங்களிலும்.

In all cases whatever—என்னென்ன சந்தர்ப்பங்களானாலும் சரி, அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம்.

In alliance or at peace with the Government of India, any Asiatic Power—இந்திய அரசாங்கத்துடன் இணக்கமாகவுள்ள அல்லது அமைதியுறவு கொண்டுள்ள எந்த ஆசிய அரசும்.

In any case—எந்தச் சந்தர்ப்பத்திலும்.

In any other manner whatsoever—வேறெந்த முறையிலேயாயினும்.

In any other way—வேறெந்த வழியிலும்.

In as much as the provocation was not given by the child—அந்த ஆத்திரமூட்டுதலானது குழந்தையால் ஏற்படுத்தப் படாததால்.

In attendance—ஆஜராயிருத்தல்.

In awarding damages—இழப்பீடு விதிக்குங்கால்.

In camera—அந்தரங்கமாக ; பகிரங்கமாக அல்லாமல்; பொதுவில் அல்லாமல் ; நீதிபதியின் தனியறையில்.

In carrying out the provisions of the Act—இச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதில்.

In case of an evident advantage-சாதகமானதென்று தெளிவாகத் தெரிகிற ஒரு சந்தர்ப்பத்தில்.

In cases of emergency-நெருக்கடி நிலைகளில்.

In cases where circumstances do not admit of serving of notice-அறிவிப்பைச் சார்வு செய்வதற்குச் சூழ்நிலைகள் இடங்கொடுக்காத சந்தர்ப்பங்களில்.

In certain cases—ஒருசில சந்தர்ப்பங்களில்.

In charge of and responsible to a company, person—ஒரு கம்பெனியின் பொறுப்பைக் கொண்டவரும், அக் கம்பெனிக்குப் பொறுப்பாக இருந்தவரும்.

In charge of a police station—ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பையுடைய.

In compliance with—இணங்க.

In conformity with—இணங்க ; ஒத்த.

In conformity with the tenor of the law—சட்டத்தின் போக்குக்கு இணங்க.

In connection with—சம்பந்தமாக.

In connection with any stamp—முத்திரை எதன் சம்பந்தமாகவும்.

In consequence of—விளைவாக.

In consultation with—கலந்தாலோசித்து.

In contravention of—மீறி.

In default—தவறினால்.

In default of bail—ஜாமீன் கொடுக்கத் தவறுகையில்.

In derogation of—குறைவுறச் செய்வதாக.

In due course—உரிய முறையில்.

In due course of law—உரிய சட்ட நடவடிக்கை மூலம்.

In either case-அவ்விரு வழக்குகள் ஏதேனும் ஒன்றில் ; இரண்டில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில்.

In either House of Parliament--நாடாளுமன்ற ஈரவைகள் ஏதொன்றிலும்.

In excess of the aforesaid limits-முன் சொல்லப்பட்ட வரம்புகளை மிஞ்சிய.

In fact—உள்ளபடியே.

In favour of candidates, giving preference to or-வேட்பாளர்களுக்கு அல்லது அவர்கள் சார்பாக முன்னுரிமை அளித்தல்.

In favour of the plaintiff—வாதிக்கு அனுகூலமாக.

In force, Act—அமலிலிருக்கும் சட்டம்.

In furtherance of common intention—பொதுவான உட்கருத்தை நிறைவேற்றும் வகையில் ; பொதுவான உட்கருத்தை மேல்நடத்தும் வகையில்.

In furtherance of the objects of the Act—இச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக.

In furtherance of the objects of this Act—இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக.

In good faith—நல்லெண்ணத்துடன்.

In lieu of—பதிலாக.

In lieu thereof—அதற்குப் பதிலாக.

In like manner—அதே முறையில்; அதே விதத்தில்.

In like manner as if complaint had been made before him—முறையீடு அவர் முன் செய்யப்பட்டிருந்தாற்போன்றே.

In need of care and protection—கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற.

In no case exceeding six months—எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆறு மாதங்களுக்கு மேற்போகாமல்.

In obedience to summons, attendance-ஆஜர்க் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆஜராதல்.

In official confidence—அலுவல் முறையில் நம்பகமாக.

In open court—நீதிமன்றப் பொதுவில் ; நீதிமன்றத்தில் பகிரங்கமாக ; பகிரங்க நீதிமன்றத்தில்.

In operation, Act—செயற்பாட்டிலிருக்கும் சட்டம்.

In order to maintain peace—அமைதியைப் பேணும் பொருட்டு.

In particular and without prejudice to the generality of the foregoing power—குறிப்பாகவும் மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுப் பாங்குக்குக் குந்தகமில்லாமலும்.

In pursuance of—அனுசரித்து ; ஒட்டி ; தொடர்ந்து ; பொறுத்து.

In pursuance of the Act—சட்டத்தை ஒட்டி.

In reference to—குறிப்பில் கொண்டு.

In relation to Union territory—ஒன்றியத்து ஆட்சி மண்டலத்தைப் பொறுத்து.

In respect of—சம்பந்தமாக ; பொறுத்த மட்டில் ; பொறுத்து.

In rotation—சுற்று முறையில்.

In so far as it is applicable—அது எந்த அளவுக்கு இயங்கத்தக்கதாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு.

In such manner and at such intervals as may be prescribed—நிர்ணயிக்கப்படலாகும் முறையிலும் தவணைகளிலும்.

In such manner as is considered proper—ஏற்றதெனக் கருதப்படும் முறையில்.

In such order as the Court may direct—நீதிமன்றம் உத்தரவிடுகிற வரிசையில்.

In such place as the Magistrate thinks fit—நடுவர் பொருத்தம் என நினைக்கும் இடத்தில்.

In support of—அனுசரணையாக.

In that behalf—அதற்கென ; அதன் பொருட்டு.

In the absence of any reasonable excuse—நியாயமான காரணம் எதுவும் இல்லா திருக்கையில்.

In the absence of special and adequate reasons—குறிப்பிட வேண்டிய சிறப்பானவை யும் போதியவையுமான காரணங்கள் இல்லாதிருக்கையில்.

In the absence of any specific provision to the contrary—குறிப்பிட்ட வகைமுறை எதுவும் இதற்கு மாறாக இல்லாதிருக் கையில்.

In the case of an adult—வயது வந்தவர் விஷயத்தில் ; வயது வந்தவரைப் பொறுத்தவரை.

In the case of any conviction—தண்டனைத் தீர்ப்பு எதையும் பொறுத்தவரை.

In the course of business—அலுவல் நடப்பு முறையில்; வியாபார நடப்பு முறையில்.

In the course of trial—விசாரணை நடப் பிலிருக்கும்போது.

In the course of investigation—புலனாய்வு நடக்கும்போது ; புலனாய்வின்போது.

In the course of his employment as such—அவர் அந்த முறையில் வேலையில் அமர்ந் திருக்கும்போது.

In the course of professional employment—தொழில் முறையில் வேலைக்கு அமர்ந் திருக்கும்போது.

In the discharge of professional duty—தொழில் முறையில் கடமை ஆற்றி வரு கையில்.

In the event of the death of the claimant—உரிமை கோருபவர் மரணமடையுங்கால்.

In the event of his absence or inability to act—அவர் இல்லாதபோது அல்லது செயற்பட இயலாதபோது.

In the execution of office—பதவிப்பணியை ஆற்றுகையில்.

In the execution of office—பதவிப் பணியை நிறைவேற்றுகையில்.

In the exercice of his duties—கடமைகளை ஆற்றுகையில்.

In the exercise of its power of revision—அதன் மேலாய்வு அதிகாரத்தைச் செலுத்து கையில்.

In the first instance—முதல் எடுப்பில்.

In the interest of Justice—நீதியின் நலம் கருதி.

In the interest of the general public—பொது மக்கள் நலனுக்காக.

In the interest of the public—பொது மக்களின் நலன் கருதி.

In the interest of public health—பொதுச் சுகாதார நலன் கருதி.

In the like cases—அதேபோன்ற சந்தர்ப்பங் களில்.

In the meantime—அதற்கிடையே.

In the opinion of the Court—நீதிமன்றத்தின் கருத்தில்.

In the ordinary course of nature—இயற்கை யின் சாதாரணப் போக்கில்.

In the pay of Government, person—அரசிடம் சம்பளம் வாங்குபவர்.

In the place of—பதிலாக.

In the view or presence of the Court, when offence is committed—குற்றம், நீதி மன்றத்தின் பார்வையிலோ முன்னிலை யிலோ செய்யப்படும்பொழுது.

In this behalf—இதற்கென ; இதன் பொருட்டு.

In virtue of that—அதன் நிமித்தமாக.

In writing—எழுத்து மூலமாக.

In writing, application—எழுத்து வடிவிலான விண்ணப்பம்.

Inability—இயலாமை ; ஏலாமை.

Inadequacy—போதாமை.

Inadequate, considration is—மறு பயன் போதாததாய் இருக்கிறது.

Inadmissible—ஏற்றுக்கொள்ளத்தகாதது.

Inam—இனாம்.

Incapable—திறனற்ற.

Incapacity—திறனின்மை.

Incident—நிகழ்ச்சி.

Incidental—இடைவிளைவாகஎழுகிற; இடை விளைவான; தற்செயலாக ஏற்படுகிற.

Incidental and supplemental matters—இடை விளைவான மற்றும் குறையை நிறைவு செய்கிற விஷயங்கள்.

Incidental expenses—தற்செயலாக ஏற் படுகிற செலவுகள்.

Incidental, supplemental or consequential modifications—இடைவிளைவாக எழுகிற, அல்லது குறையை நிறைவு செய்கிற, அல்லது பின்விளைவாக எழுகிற மாறுதல் கள்.

Incidental matter—இடைவிளைவான விஷயம்.

Incidents of property—சொத்து அடைகள்.

Incidents of rights—உரிமைகளின் அடைகள்.

Incidents of tax—வரியின் அடைகள்.

Incitement—ஏவுதல்; தூண்டுதல்.

Include—உள்ளடக்கு ; சேர்த்துக்கொள்.

Inclusive—அடங்கிய ; உள்ளடங்கலாக.

Incompetence—தகுதியின்மை.

Income—வருமானம்.

Income tax—வருமான வரி.

Income, taxes on—வருமானத்தின் மீதான வரிகள்.

Incompetency—தகுதியின்மை.

Incompetency, to the extent of—தகுதியின் மையின் அளவுக்கு.

Inconsistency—ஒவ்வாமை.

Inconsistent—ஒவ்வாத; மாறாக ; முரண் பட்ட; முரணான.

Inconsistent with duty—கடமைக்கு மாறாக.

Inconvenience—அசௌகரியம் ; வசதிக் குறைவு.

Incorporate—கூட்டு நிறுவனமாகப் பதிவு செய் ; ஒன்றாகச் சேர்.

Incorporated company—கூட்டு நிறுவன மாகப் பதிவு செய்யப்பட்ட கம்பெனி.

Incorporation—கூட்டுநிறுவனமாகப் பதிவு செய்தல்.

Incorporeal property—நுண்பொருள் ; சூட் சுமப் பொருள்.

Incorporeal right—நுண்பொருளுரிமை.

Incorrigible—திருத்த முடியாத.

Increase—அதிகரித்தல் ; பெருக்குதல்.

Incriminate—குற்றப்படுத்து.

Incumbent of an office—பதவியை வகிப் பவர்.

Incur—செலவழி ; மேற்கொள்.

Incurred expenses—செய்யும்படி நேர்ந்த செலவுகள்.

Incurred penalty—பட்ட தண்டனை.

Incurred sickness—நோய்க்கு உள்ளான.

Incurring obligations—கடமைப் பொறுப்பு களை மேற்கொள்ளுதல்.

Incurring the risk of causing death—மரணம் விளைவிக்கின்ற ஆபத்துக்கு உள்ளாதல்.

Indebted—கடன்பட்டிருக்கிற.

Indecent—அடாத ; இழிதகைமையான ; கேவலமான; பண்பற்ற; வெட்கங்கெட்ட.

Indefinite character—திட்டவட்டமில்லாத தன்மை.

Indemnify—ஈட்டுறுதியளி ; தண்டத் தவிர்ப்பு அளி.

Indemnity—ஈட்டுறுதி ; உத்தரவாதம் தண்டத்தவிர்ப்பு.

Indent—தேவைப்பட்டியல்.

Independent evidence—ஒருசார்பில்லாத சாட்சியம் ; சுயேச்சையான சாட்சியம்.

Independent charge—சுயேச்சையான பொறுப்பு.

Independently of—ஒருசார்பில்லாமலே ; சுயேச்சையாக.

Index—குறியீட்டெண்.

Indian Administrative Service—இந்திய நிர் வாகத்துறை ஊழியம்.

Indian Coinage Act, 1906—1906ஆம் ஆண்டு இந்திய நாணயத் தயாரிப்பு முறைச் சட்டம்.

Indian Consul—இந்தியத் துணைத் தூதர்.

Indian Council of Medical Research—இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம்.

Indian hemp plant—இந்தியக் கஞ்சாச் செடி.

Indian Independence Act, 1947—1947ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரச் சட்டம்.

Indian Lunacy Act—இந்தியப் பைத்தியச் சட்டம்.

Indian Majority Act—இந்திய முதிர்மைச் சட்டம்.

Indian Medical Council Act—இந்திய மருத் துவக் கழகச் சட்டம்.

Indian Medicine—இந்திய மருத்துவம்.

Indian Numerals—இந்திய எண்கள்.

Indian Penal Code—இந்தியத் தண்டனைச் சட்டம்.

Indian Pharmacopoeia—இந்திய மருந்தாக்க நூல்.

Indian Police Service—இந்தியக் காவல்துறை ஊழியம்.
Indian Registration Act—இந்தியப் பதிவுச் சட்டம்.
Indian Security Press—இந்திய செக்யூரிட்டி அச்சகம்.
Indian Standards Institution—இந்தியத் தரத் திட்ட நிறுவனம்.
Indian State—இந்திய சமஸ்தானம்.
Indian Succession Act—இந்திய வழிமுறைச் சட்டம்.
Indication—சுட்டிக்காட்டுதல்.
Indict—குற்றஞ்சாட்டு.
Indicting for murder—கொலைக்காகக் குற்றஞ்சாட்டுதல்.
Indignity—அவமதிப்பு.
Indigo—அவுரி; நீலச்சாயம்.
Indirect—மறைமுகமான; நேர்முகமல்லாத.
Individual—தனிப்பட்டவர்; தனியாள்; தனியொருவர்; தனி நபர்.
Individual and collective activity—தனி மனிதராகவும் கூட்டாகவும் செய்யும் செயல்.
Individual judgement—சுயமான முடிவு.
Individuals—தனி நபர்கள்.
Inducement—தூண்டுதல்.
Industrial Dispute—தொழில்துறை தகராறு.
Industrial and Labour dispute—தொழில் துறை மற்றும் தொழிலாளர் தகராறு.
Industrial purposes—தொழிலியல் நோக்கங்கள்.
Industries—தொழில்கள்.
Industry—தொழில்.
Inedible grain—உண்ணத்தகாத தானியம்.
Ineligible—அருகதையற்ற.
Infancy—பிள்ளைமை.
Infant—பிள்ளை.
Infection of disease, to spread—நோயைத் தொற்றிப் பரவச் செய்தல்.
Infectious disease—தொற்று நோய்; தொற்று வியாதி.
Inference—ஊகம்.
Inferior—கீழ்நிலையிலுள்ளவர்; மட்டமான.
Inferior Court—கீழ்நிலை நீதிமன்றம்.
Infirmity—தளர்ச்சிநிலை; பலவீனம்.
Infirmity of mind or body—மனத்தளர்ச்சி அல்லது உடல் தளர்ச்சி.
Inflict harm—தீங்கிழை.
Inflict punishment—தண்டனை வழங்கு.
Inflicting—சுமத்தல்; படுத்துதல்; விதித்தல்.
Infliction of reasonable punishment—நியாயமான தண்டனையைச் சுமத்துதல்.
Influence, bring under his—அவர் வசப்படுத்துதல்.
Influence, moral—நெறியியல் செல்வாக்கு.
Influence, exercising evil—செல்வாக்கைத் தீயவழியில் செலுத்துதல்.
Inform—தெரிவி.
Informality—வழக்கமான முறையை அனுசரியாமை.
Informant—தகவல் கொடுப்பவர்; தகவல் தருபவர்.
Information—தகவல்.
Infraction—மீறுதல்.
Infraction of any law—சட்டம் எதனையும் மீறுதல்.
Infringed law—மீறப்பட்ட சட்டம்.
Ingot—வார்ப்புக்கட்டி.
Ingredient—அமைப்பான்.
Ingress—நுழைதல்.
Inhabitant—வசிப்பவர்.
Inhabitants of an area—ஒரு பிரதேசத்தின் குடிகள்.
Inhabited house—குடியிருக்கும் வீடு.
Inherent powers—உள்ளுறை அதிகாரங்கள்.
Inheritance—வாரிசுரிமை.
Inhibiting—கட்டுபடுத்தும்.
Initial—சுருக்கொப்பம்.
Initial order—முதற் கட்டளை.
Initiated under Sub-Section (1), after any action is—(1)ஆவது உட்பிரிவின்படி நடவடிக்கை ஏதேனும் தொடங்கப் பட்டதற்குப் பின்பு.
Initiating or exercising supervision over prosecutions, for—குற்ற வழக்குகளைத் தொடர்வதற்கு அல்லது குற்ற வழக்குகளின் நடப்பைக் கண்காணிப்பதற்கு.
Initiation of proceedings—நடவடிக்கைகளைத் தொடங்குதல்.
Initiative, on his own—தாமே முற்பட்டு.

Injunction—ஏவு கட்டளை.
Injunction, interim—இடைக்கால ஏவு கட்டளை.
Injunction, mandatory—வலியுறுத்துக் கட்டளை.
Injunction, perpetual—நிரந்தர ஏவு கட்டளை.
Injunction, prohibitive—தடையுறுத்துக் கட்டளை.
Injunction, temporary—தாற்காலிக ஏவு கட்டளை.
Injures—கேடு உறுத்துகிற / விளைவிக்கிற.
Injuring—கேடுண்டாக்குதல் ; சிதைத்தல்.
Injurious—கெடுதலான;கேடு விளைவிக்கும்.
Injurious to health—உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கிற.
Injury—காயம் ; கேடு.
Injury of substantial nature—பெருமளவிலான கேடு.
Injury, suffered—கேடுற்ற.
Injury without damage (Injuria sine damno)—சேதமற்ற கேடு.
Inland waterways—உள்நாட்டு நீர்ப்பாதைகள்.
Inlet—நுழைவாயில்.
Inmate—உள்ளுறைபவர்.
Inmate of a brothel—ஒரு விபசார விடுதியில் உறைபவர்.
Inn-Keeper—வழிப்போக்கர் விடுதி நடத்துபவர்.
Innocent—ஏதுமறியாத ; குற்றமில்லாத.
Innocent person—குற்றமற்றவர்; நிரபராதி.
Inoperative—செயற்பாடற்றிருக்கிற.
Inoperative, it shall be void and—அது விழலாகிச் செயற்பாடற்றுப்போகும்.
Inorganic matter—கரியமில்லாத பொருள்.
In-patient—உள்ளுறை நோயாளி.
Inquest—பிரேத விசாரணை.
Inquire and decide—விசாரித்துத் தீர்மானம் செய்.
Inquiry—பரிசீலனை ; விசாரணை.
Inquisitorial as possible, as little—இயன்ற அளவுக்குக் கடுஞ்சோதிப்பு இல்லாத முறையில்.

Insane—புத்திசுவாதீனமற்ற ; பைத்தியம் பிடித்த.
Inscription—கல்வெட்டு ; பொறித்தல்.
Inserting—செருகுதல்; புகுத்துதல்; பொருத்துதல் ; போடுதல்.
Inserting additional conditions therein—கூடுதல் நிபந்தனைகளை அதில் புகுத்துதல்.
Insolvency—நொடிப்புநிலை.
Insolvency and Bankruptcy—நொடிப்பு நிலையும், வணிக நொடிப்பு நிலையும்.
Insolvency jurisdiction—நொடிப்பியல் அதிகார வரம்பு.
Insolvent—நொடித்துப்போனவர்.
Insolvent, discharged—விடுவிப்புப் பெற்ற நொடித்துப்போனவர்.
Insolvent, undischarged—விடுவிப்புப்பெறாத நொடித்துப்போனவர்.
Inspection—ஆய்வு ; பார்வையிடுதல்.
Inspection, local—தல விசாரணை.
Inspection memorandum—ஆய்வு விவரக் குறிப்பு.
Inspection of any place—இடம் எதையும் ஆய்வு செய்தல்.
Inspection of schools—பள்ளிகளை ஆய்வு செய்தல்.
Inspector—ஆய்வாளர்.
Inspector General of Prisons—சிறைத் துறைத் தலைவர்.
Inspired—உயிர்ப்பூட்டிய.
Instance—சந்தர்ப்பம் ; தடவை.
Instance, at his own—அவரே முன் வந்து.
Instance, first—முதல் எடுப்பு ; முதற்படி.
Instead of—பதிலாக.
Instigate—தூண்டு.
Institute—நிலையம்.
Institute a search—சோதனை நடத்து.
Instituted—தொடரப்பட்ட.
Institution—நிறுவனம் ; தொடுத்தல்.
Institution of a suit—உரிமை வழக்கு தொடுத்தல்.
Instruct—ஏவுரை செய்.
Instruction—அறிவுறுத்தல் ; கற்பித்தல் ; போதனை; ஏவுரை.
Instructor—பயிற்றுநர்.

Instrument—கருவி ; சாசனம் ; பத்திரம் ; முறையாவணம்.

Instrument for counterfeiting—கள்ளத் தயாரிப்புக்கான கருவி/சாதனம்.

Instrument of accession—இணைப்புச் சாசனம்.

Instrument of gaming—சூதாட்டக் கருவி.

Insubordination—கீழ்ப்படியாமை.

Insult—பழி ; பழித்தல்.

Insulting statement—பழிப்புரை.

Insurance—காப்பீடு.

Insurance Act—காப்பீடு சட்டம்.

Insurance Corporation—காப்பீட்டியல் கூட்டு நிறுவனம்.

Insurrection—புரட்சி.

Integration—ஒருமைப்பாடு.

Integrity —முழுமை ; ஒருமைப்பாடு.

Integrity of India, for upholding the sovereignty and—இந்தியாவின் பேரரசாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காப்பதற்காக.

Intellectual character—அறிவின் தகைமை.

Intelligence—தகவல் ; வேவுச் செய்தி.

Intelligible characters—புரியும்படியான எழுத்துக்கள்.

Intend—உட்கருத்துக்கொள்.

Intended—உட்கருத்துக்கொண்ட ; கருதப்பட்ட ; கருதிய.

Intended for sale—விற்பனை செய்யக் கருதப்பட்ட.

Intended to be done—செய்யக் கருதப்படும்,

Intention—உட்கருத்து ; கருத்து.

Intentionally—உட்கருத்துடன்.

Intentionally omitting to produce a document—பத்திரத்தை நினைந்தே கொண்டு வரத் தவறுதல்.

Inter-State Council—மாநிலங்களுக்கு இடையமை மன்றம்.

Inter-State migration—மாநிலங்களுக்கிடையே வலசை பெயர்தல்.

Inter-State quarantine—மாநிலங்களுக்கிடையே கட்டாய ஒதுக்கிவைப்பு.

Inter-State rivers—மாநிலங்களிடையே செல்லும் ஆறு ; மாநிலங்களுக்கிடையேயான ஆறு.

Inter-State trade and commerce—மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகமும் வாணிகமும் ; மாநிலங்களுக்கிடையேயுள்ள வர்த்தகமும் வாணிகமும்.

Intercourse—உடலுறவு ; தொடர்பு ; போக்குவரவு.

Intercourse of vessels in a state of quarantine with the shore or with other vessels, for regulating the—கட்டாய ஒதுக்கிவைப்பு நிலையிலுள்ள கலங்கள் கரையுடன் அல்லது வேறு கலங்களுடன் தொடர்பு கொள்வதை ஒழுங்குபடுத்துவதற்காக.

Intercourse within the territory of India—இந்தியாவின் ஆட்சிமண்டலத்திற்குள் போக்குவரவு.

Interest—அக்கறை ; உரிமை ; நலன் ; பாத்தியதை ; வட்டி.

Interest, absolute—வரம்பிலா பாத்தியதை.

Interest, limited—வரம்புடை பாத்தியதை.

Interest of discipline, in the–கட்டுப்பாட்டைக் காக்கும் பொருட்டு.

Interest of justice, in the–நீதி நலத்தின் பொருட்டு.

Interest of the public–பொதுமக்களின் நலன்.

Interested–அக்கறை கொண்ட.

Interests of minorities–சிறுபான்மையினரின் உரிமைகள்.

Interfere–குறுக்கிடு; தடை செய்; தலையிடு; நிலைகுலை;

Interim injunction–இடைக்கால ஏவுகட்டளை.

Interim order–இடைக்காலக் கட்டளை.

Interlocutory order–இடைநிலைக் கட்டளை.

Intermediary–இடை உரிமையாளர்.

Intermediate custody–இடைநிலைப் பாதுகாப்பு.

Intermediate facts–இடைநிலைச் சங்கதிகள்.

Intermediate persons, several–இடையிலுள்ள பல ஆட்கள்.

Internal communication between rooms–அறைகளுக்கிடையேயுள்ள உள்வழி/தொடர்பு.

Internal disturbance–உள்நாட்டுக் குழப்பம்.

International agreement–பன்னாட்டு உடன்பாடு

International Trade—பன்னாட்டு வணிகம்.

International conference—பன்னாட்டு மாநாடு.

International dispute—நாடுகளிடையே யுள்ள தகராறு.

International form of numerals—எண்களின் பன்னாட்டு வடிவம்.

International peace—நாடுகளிடையேஅமைதி.

International law—பன்னாட்டுச் சட்டம்.

Interpose—குறுக்கிடு.

Interpretation—பொருள்கோள்; பொருள் கோள் செய்தல்; வாய்வழி மொழி பெயர்ப்பு.

Interpretation clause—பொருள்கோளுக்கான வகைமுறை.

Interpreter—மொழிபெயர்ப்பாளர் ; வாய் வழி மொழிபெயர்ப்பவர் ; விளக்கம் சொல்பவர்.

Interrogation—வினாவுதல்.

Interrogatories—விடுவினாக்கள்.

Interrupt—தடை ஏற்படுத்து.

Interruption—குறுக்கீடு.

Interval (time)—தவணை.

Interval for rest—இளைப்பாறுவதற்கான இடைவேளை.

Intervals—கால இடைவெளிகள்; காலாந் தரங்கள்.

Intervals as may be directed, make report at such—உத்தரவிடப்படலாகும் காலாந்த ரங்களில் அறிக்கை செய்.

Intervals, at— இடைக்காலங்களில்.

Intervene—இடைப்படு ; இடையிடு.

Intervene between two sittings, six months shall not—இரண்டு அமர்வுகளுக்கு ஊடே ஆறு மாதங்கள் இடைப்படுதல் ஆகாது.

Interview—பேட்டி காணுதல்; பேட்டிய ளித்தல்.

Intestacy—உயில் எழுதாது இறத்தல்.

Intimation—செய்தி ; தகவல்.

Intimation,under—தகவல் கொடுப்பதோடு.

Intimidation—மிரட்டல் ; மிரட்டுதல்.

Intoxicant—போதையூட்டும் பொருள்.

Intoxicating drink—போதை தரும் பானம்.

Intoxicating drug—போதையூட்டும் மருந்துச் சரக்கு.

Intoxicating liquor— போதையூட்டும் மது பானம்.

Intoxication—போதை.

Introduce—அறிமுகம் செய் ; கொணர் புகுத்து.

Introducing Money Bill—பண மசோதா வைக் கொணர்தல்.

Introducing new matters—புதிய விஷயங் களைப் புகுத்துதல்.

Introduction—அறிமுகம்; அறிமுகப்படுத் துதல்; புகுத்துதல் ; முன்னுரை.

Introductory—முன்னுரையாக.

Intrude—வலியத் தலையிடு.

Inundation—வெள்ளத்தில் மூழ்கடித்தல் ; வெள்ளப் பெருக்கம்.

Invalid—உடல் ஏலாமை ; செல்லத்தக்க தன்று; செல்லத்தகாதது ; செல்லாத.

Invalidate—செல்லாததாக்கு ; செல்லாத படி செய்.

Invalidity—செல்லாத் தன்மை.

Invention—கண்டுபிடிப்பு.

Inventory— விவரப்பட்டியல்.

Invest—சூட்டு ; முதலீடு செய்.

Invested by law—சட்டத்தின்படி சூட்டப் பட்டுள்ள.

Invested with powers—அதிகாரங்கள் சூட்டப்பட்ட.

Investigate—பரிசீலனை செய் ; புலனாய்வு செய் ; விசாரணை செய்.

Investigate the case—வழக்கைப் புலனாய்வு செய்.

Investigation—ஆய்வு ; பரிசீலனை ; புல னாய்வு.

Investigation, Central Bureau of Intelligence and—வேவுச்செய்தி மற்றும் புலனாய்வுத் துறை மத்திய அலுவலகம்.

Investigation powers—புலனாய்வு செய்வதற் கான அதிகாரங்கள்.

Invitation of tender, by—ஒப்பந்தப்புள்ளி வேண்டுகோள் மூலம்.

Invoice—விலைப்பட்டி.

Involved—உள்ளடக்கிய.

Involving—உள்ளாகக்கூடிய.

Involving decisions according to customary law—வழக்காற்றுச் சட்டத்தின்படி முடி வெடுத்தலை உள்ளடக்கியதாயிருக்கின்ற.

Iron and steel—இரும்பு மற்றும் எஃகு.

Ironically—மறைமுக நிந்தனையாக.

Irreconcilable—ஒவ்வாத ; பொருத்த முடியாத.

Irregular—முறைகேடான.

Irregularity—முறைகேடு.

Irrigation—நீர்ப்பாசனஅமைப்பு; பாசனம்.

Isolate—தனிப்படுத்து.

Isolation—பிரித்துத் தனியாக வைத்தல்.

Issue—இதழ் ; பிறப்பி ; வழங்கு.

Issue an order—கட்டளையொன்றைப் பிறப்பி/வழங்கு.

Issue of newspaper—செய்தித்தாளின் இதழ்.

Issue of money—பணத்தை வழங்குதல்.

Issue of notification—அறிவிக்கையைப் பிறப்பித்தல்.

Issue of search warrants—சோதனைக் கட்டளைகள் பிறப்பித்தல்.

Issue slip—வழங்குச் சீட்டு.

Issued Authority—அதிகாரச் சீட்டு வழங்கப் பட்ட

It is continued—இது தொடர்ந்து இருக்கச் செய்யப்படுகிறது.

It is hereby enacted as follows—பின்வருமாறு இதன் மூலம் இயற்றப்படுகிறது.

It is in danger of perishing—அழிந்து விடக் கூடிய ஆபத்தில் அது இருக்கிறது.

It is necessary or expedient so to do—அவ்வாறு செய்வது அவசியம் அல்லது உகந்தது.

It shall apply to cases referred to—அது குறிப்பிடப்பட்ட வழக்குகளின்மீது இயங்குதல் வேண்டும்.

It shall be accompanied by a copy of record —பதிவின் நகல் ஒன்று அதனுடன் செல்லுதல் வேண்டும்.

It shall become void and inoperative—அது விழலாகிச்செயற்பாடற்றுப்போகும்.

It shall come into force—அது/இது அமலுக்கு வருதல் வேண்டும்.

It shall have effect—அது/இது அமலுக்கு வருதல் வேண்டும்.

It shall have no effect—அது/இது அமலுக்கு வராதிருத்தல் வேண்டும்.

It will take effect—அது அமலுக்கு வரும்.

Item—இனம்.

It inerant food-stalls—ஊர் ஊராகச் செல்லும் உணவுக் கடைகள்.

J

Jaggery—பனை வெல்லம்.

Jail—சிறைச்சாலை.

Jail custody—சிறைக்காவல்.

Jailor—சிறை அலுவலர்.

Jain—ஜைனர் ; சமணர்.

Jam—பாகு.

Jelly crystals—கெட்டியான பழப்பாகுப் படிகங்கள்.

Jeweller—கடிகாரம் பழுதுபார்ப்பவர்; நகை செய்பவர் ; நகை வியாபாரி.

Joinder of charges—குற்றச்சாட்டுகளை ஒன்று சேர்த்தல்.

Joining time—சேருதற்காலம்.

Joint—இணை; கூட்டு; மூட்டு.

Joint Commission—கூட்டு ஆணையம்.

Joint family—கூட்டுக் குடும்பம்.

Joint Jailor—கூட்டுச் சிறை அலுவலர்.

Joint sitting—கூட்டு அமர்வு.

Joint State Public Service Commission—கூட்டு மாநில அரசூழியத் தேர்வு ஆணையம்.

Joint owner—கூட்டுச் சொந்தக்காரர்.

Jointly—சேர்ந்தரணையாக.

Jointly and severally—கூட்டாகவும் தனித் தனியாகவும்.

Journal—குறிப்பேடு; நடவடிக்கைக் குறிப் பேடு; பத்திரிகை.

Journey time from the place of arrest—கைதுசெய்த இடத்திலிருந்து பயண நேரம்.

Judge—நீதிபதி; நீதியர்; நீதியார்.

Judge, City Civil Court—நகர உரிமை வழக்கு நீதிமன்ற நீதிபதி.

Judges are equally divided in opinion, if—கருத்தால் வேறுபடும் நீதிபதிகளின் எண் ணிக்கை சரிசமமாக இருக்குமானால்.

Judging for himself, recovering his power of—தாமே நிதானித்துப் பார்க்கும் சக்தியைத் திரும்பப் பெறுதல்.

Judging to the best of one's ability—ஒருவர் தமது முழுத் திறமையையும் பயன் படுத்தித் தீர்மானித்தல்.

Judgment—கருத்து ; தீர்ப்பு; நிதானிப்பு; முடிவு.

Judgment, Delivering of—தீர்ப்பு வழங் குதல்.

Judgment of the Magistrate, likely to cause a breach of peace in the—நடுவரின் கருத் தில் அமைதிக் குலைவை விளைவிக்கக் கூடியதாக.

Judgment, pronounced—பகரப்பட்ட தீர்ப்பு.

Judgment, signing—தீர்ப்பில் ஒப்பமிடுதல்.

Judicial function—நீதித்துறை அலுவல்.

Judicial notice, taking—நீதிமுறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளல்.

Judicial Magistrate—நீதித்துறை நடுவர்.

Judicial Magistrate of the First Class—நீதித் துறை முதல் வகுப்பு நடுவர்.

Judicial office—நீதித்துறைப் பதவி.

Judicial proceeding—நீதி நடவடிக்கை; நீதித்துறை நடவடிக்கை; நீதி மன்ற நடவடிக்கை; நீதிமுறை நடவடிக்கை.

Judicial process—நீதிமுறைக் கட்டளை.

Judicial service—நீதித்துறை ஊழியம்.

Judicially—நீதி முறையில்.

Judicially noticeable—நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளத்தக்க.

Judicial stamp—நீதிமன்ற முத்திரை.

Judiciary—நீதித்துறை.

Junior approved school—ஒப்புதல் அளிக்கப்பெற்ற இளநிலைப் பள்ளி,

Junior Commissioned Officer—ஆணை பெற்ற இளநிலை அலுவலர்.

Jurisdiction—அதிகாரம் ; அதிகாரவரம்பு.

Jurisdiction, exercise—அதிகார வரம்பு செலுத்து.

Jurisdiction and power—அதிகார வரம்பும் அதிகாரமும்.

Jurisdiction exercisable by Court—நீதி மன்றத்தால் செலுத்தத்தக்க அதிகார வரம்பு.

Jurisdiction extended by law—சட்டத்தின் மூலம் விரிவாக்கப்பட்ட அதிகார வரம்பு.

Jurisdiction, insolvency—நொடிப்பியல் அதிகார வரம்பு.

Jurisdiction to inquire into the offence—குற்றத்தை விசாரணை செய்வதற்கான அதிகார வரம்பு.

Jurist—சட்ட வல்லுநர்.

Juror—சான்றாயர்.

Jury—சான்றாயம்.

Just—நியாயம் ; நியாயமான.

Just and proper—நியாயமானதும் தகுதியானதுமான.

Just and reasonable—முறையானதும் நியாயமானதுமான.

Just excuse—நியாயமான முகாந்திரம்.

Justice—நீதி.

Justice, failure of—நீதி தவறுகை ; நீதி தவறுதல்.

Justice, in the interest of—நீதி நலன் கருதி.

Justice of the Peace—அமைதி காப்பு நடுவர்.

Justification —நியாயப்படுத்துதல்.

Justify—சரியென்று காட்டு ; நியாயமென நிரூபி.

Jute products—சணல் பொருள்கள்.

Juvenile Court—இளையோர் நீதி மன்றம்.

Juvenile delinquent—இளங்குற்றவாளி.

Juvenile offender—இளங்குற்றவாளி.

Juvenile, youthful offender and young person—இளையோர், இளவயதுக் குற்றவாளி, இளம் பருவத்தினர்.

K

Keep—நடத்துதல் ; வைத்தல்.

Keep in confinement—அடைத்து வைத்திருத்தல்.

Keep peace—அமைதி பேணு.

Keeping—காத்தல் ; பேணு.

Keeping a gaming house—சூதாட்ட விடுதியை வைத்துவருதல்.

Keeping any fire—தீ எதனையும் பேணுதல்.

Keeps or has in his possession, he—அவர் தம் வசம் வைத்திருக்கிறார் அல்லது கொண்டிருக்கிறார்.

Kept for sale—விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

Kept out of the way by the adverse party, person—கிட்டாதபடி எதிர் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டவர்.

Kid—வெள்ளாட்டுக்குட்டி.

Kidnap—கவர்ந்து செல் ; பிள்ளை பிடி.

Kidnapping—கவர்ந்து செல்லுதல்; பிள்ளை பிடித்தல்.

Kill—கொல்.

Kind—வகை.

Kind, in—பண்டமாக.

Kind, whether in money or in—பணமாகவோ பண்டமாகவோ.

Kindle fire—தீயைக் கிண்டிவிடு.

Kitchen—அடுக்களை ; சமையலறை.

Kitchen staff—சமையலறைப் பணியாளர்கள்.

Knowing or has reason to believe, person—அறிந்திருக்கிற அல்லது நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்கிற ஆள்.

Knowingly—அறிந்தே.

Knowledge—அறிவு; தெரிந்தது; தெரிவது; அறிவுறுகை, அறிவுறுதல்.

Knowledge, anything which came to his—அவருடைய அறிவுக்கு எட்டிய விஷயம் எதுவும்.

Knowledge, facts especially within his—அவருடைய அறிவுக்கு மாத்திரமே தெரிந்துள்ள சங்கதிகள்.

Knowledge of a fact—ஒரு சங்கதியைப் பற்றிய அறிவு.

Knowledge of the witness, from their—சாட்சியைப் பற்றி அவர்கள் தெரிந்ததிலிருந்து.

Knowledge, proving facts from his own—அவருக்குச் சொந்தமாகத் தெரிந்ததிலிருந்து சங்கதிகளை நிரூபித்தல்.

Known as—வழங்கப்பட்ட ; வழங்கப்பெற்ற.

Known as......, to be—..என்று வழங்கப்பட வேண்டிய.

Known by whatever name—என்ன பெயரில் வழங்கப்பட்டாலும்.

L

Label—குறிப்புச்சீட்டு ; பெயர்ச்சீட்டு.

Labour—உழைப்பு ; தொழிலாளர்.

Labour dispute—தொழிலாளர் தகராறு.

Labour, hard—கடுமையான உழைப்பு.

Laid before me, information has been—என் முன் தகவல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

Laid down, at the rate—விதிக்கப்பட்ட வீதத்தில்.

Laid, no suit shall be—ஒரு வழக்கும் தொடரப்படுதல் ஆகாது.

Lamb—செம்மறிக்குட்டி ; செம்மறியாட்டுக்குட்டி.

Lancet—அறுவைக்கத்தி.

Land Acquisition Act—நிலம் ஈட்டுதல் சட்டம்.

Land for pasture—மேய்ச்சல் நிலம்.

Land force—நிலப்படை.

Land holder—நிலம் வைத்திருப்பவர்.

Land holding—நில உடைமை.

Land records—நிலம் சம்பந்தமான ஆவணங்கள்.

Land reform—நிலச் சீர்திருத்தம்.

Land revenue—நிலத்தீர்வை ; நிலவரி ; நில வருவாய்.

Land-lord—நிலக்கிழார் ; நிலச்சுவான்தார்.

Land-mark—நிலக்குறி ; நில எல்லைக்குறி.

Land revenue, arrears of—நிலவரிப் பாக்கி.

Landed property—நிலச் சொத்து.

Landing place—இறங்கும் தளம்.

Lands Ceiling Act—நிலங்கள் உச்சவரம்புச் சட்டம்.

Language, genius of the—மொழியின் தனியியல்பு.

Language, official—ஆட்சிமொழி.

Language, regional—பிராந்திய மொழி.

Language, the judgment—தீர்ப்புக்குரிய மொழி ; தீர்ப்பு மொழி.

Language in use—வழங்கி வரும் மொழி.

Land tenure—நிலவுரிமை முறை.

Language of record—பதிவுமொழி ; பதிவுக்குரிய மொழி.

Language of the Court—நீதிமன்ற மொழி.

Language used in document is plain—பத்திரத்தில் பயன்படுத்தப்படும் வாசகமானது தெளிவுள்ளது.

Lapse—ஓய்ந்துபோதல் ; காலாவதியாதல்.

Lapse of period of limitation—காலாவதி கழிதல்.

Lapse to the Government, shall—அரசாங்கவுடைமையாதல் வேண்டும்.

Large, be at—சுதந்திரமாக இரு.

Large number, in—அதிக எண்ணிக்கையில்.

Lascivious—காமத்தைத் தூண்டக்கூடிய.

Lash—சவுக்கால் அடி.

Last foregoing section—முன்சென்ற கடைசிப் பிரிவு.

Last mentioned person—கடைசியாகச் சொல்லப்பட்டவர்.

Last preceding census—முந்திய கடைசி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு.

Last preceding section—முந்திய கடைசிப் பிரிவு.

Last sitting—கடைசி அமர்வு.

Lateral support—பக்கவாட்டு ஆதாரம்.

Laundry—சலவைச்சாலை.

Law—சட்டம்.

Law and order—சட்டமும் ஒழுங்கும்.

Law, administration of—சட்ட நிர்வாகம்.

Law, administrative—நிர்வாக முறைச் சட்டம்.

Law, declared—விளம்பப்பட்ட சட்டம்.

Law, established by—சட்டப்படி நிறுவப்பட்ட.

Law in force—அமலிலிருக்கும் சட்டம்.

Law, making of—சட்டம் இயற்றுதல்.

Law of Nations—சர்வதேசச் சட்டம்.

Law of procedure—நடைமுறைச் சட்டம்.

Law of the State—அரசின் சட்டம்.

Law, in due course of—சட்டத்தின் முறையான போக்கில்.

Lawful—சட்டபூர்வமான.

Lawful consignments—சட்டபூர்வமாக அனுப்பப்படும் சரக்குகள்.

Lawful custody—சட்டபூர்வமான காவல்; சட்டபூர்வமான பாதுகாப்பு.

Lawful excuse—சட்டபூர்வமான காரணம்.

Lawful guardian—சட்டபூர்வமான காப்பாளர்.

Lawful means—சட்டபூர்வமான வழிகள்.

Lawful power—சட்டபூர்வமான அதிகாரம்.

Lawfully—சட்டப்படியாக ; சட்டபூர்வமாக.

Lawfully compound—சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்.

Lawyer—வழக்கறிஞர்.

Lay—தாக்கல்செய் ; வை.

Lay before the court—நீதிமன்றத்தின்முன் தாக்கல் செய் ; நீதிமன்றத்தின் முன்னிலையில் வை; நீதிமன்றத்தின் முன் வை.

Lay off—நிறுத்திவைத்தல்.

Laying down special provisions—சிறப்பு வகைமுறைகளை விதித்தல்.

Leading question—விடைபொதி வினா.

Leading to a reasonable suspicion, circumstances—நியாயமான ஐயத்தை உண்டாக்கும் சூழ்நிலைகள்.

Leading to the institution of the enquiry, information—விசாரணையைத் தொடர்வதற்குக் காரணமாக இருக்கும் தகவல்.

Lead to—இட்டுக்கொண்டு செல் ; காரணமாக இரு.

Leaflet—சிற்றிதழ் ; சிற்றேடு.

Lease—குத்தகை.

Leave—அனுமதி ; விடுப்பு.

Leave book—விடுப்புப் புத்தகம்.

Leave of absence—வாராமை விடுப்பு.

Leave of court—நீதிமன்ற அனுமதி.

Leave with wages register—கூலியுடன் கூடிய விடுப்புப் பதிவேடு.

Left open, area—திறப்பாக விடப்பட்ட பிரதேசம்/இடம்.

Legal adviser—சட்ட ஆலோசகர்.

Legal affairs—சட்ட விவகாரங்கள்.

Legal aid—சட்ட உதவி.

Legal application—சட்டப்படியான விண்ணப்பம்.

Legal authority—சட்டப்படியான அதிகார ஆயம் ; சட்டப்படியான அதிகார உரிமை.

Legal character—சட்டப்பாங்கு ; சட்டபூர்வமான தகுதி; சட்டபூர்வமான தன்மை.

Legal character, duties of a—சட்டப்பாங்குடைய கடமைகள்.

Legal condition—சட்ட நிபந்தனை.

Legal custody—சட்டபூர்வமான பாதுகாப்பு.

Legal incapacity—சட்டப்படியான தகுதியின்மை ; சட்டப்படியான திறனின்மை.

Legal keeper—சட்டப்படி வைத்திருப்பவர்.

Legal liability—சட்டப்படியான கடப்பாடு.

Legal matter—சட்ட விஷயம்.

Legal practitioner—சட்டத் தொழிலாற்றுநர் ; சட்டத் தொழிலாற்றுபவர்.

Legal proceeding—சட்ட நடவடிக்கை.

Legal process—சட்டமுறைக் கட்டளை; நீதிமுறைக் கட்டளை.

Legal profession—சட்டத்தொழில்.

Legal punishment—சட்டப்படியான தண்டனை.

Legal remuneration—சட்டப்படியான ஊதியம்.

Legal representative—சட்டப்படியான/சட்டபூர்வமான பிரதிநிதி.

Legal right—சட்டப்படியான உரிமை.

Legality—சட்டசீலம்; சட்டபூர்வமான தன்மை.

Legality, correctness or propriety of any finding—முடிபு எதனின் சட்டசீலம், சீர்மை அல்லது பொருத்தமுடைமை.

Legality of seizure—கைப்பற்றுகையின் சட்ட சீலம்.

Legality of sentence—தீர்ப்புத்தண்டனையின் சட்டபூர்வமான தன்மை.

Legally—சட்டப்படி.

Legally bound—சட்டப்படி கட்டுப்பட்ட.

Legally competent—சட்டப்படி தகுதி வாய்ந்த.

Legatee—உயில்வழிஉரிமையர்.

Legible condition—தெளிவாகத் தெரியும் நிலை.

Legibly—புரியும்படியாக.

Legislate—சட்டம் இயற்று.

Legislation—சட்டம் இயற்றுதல்.

Legislative Assembly—சட்டமன்றப் பேரவை.

Legislative Council—சட்டமன்ற மேலவை.

